Registered as a NewsPaper

விலை ரூபா 7.00

# ஈழநாதம்

EELANATHAM மக்கள் நாளிதழ்

பக்கங்கள் ~ 08

நாதம் 14 | திருவள்ளுவர் ஆண்டு 2034 | சித்திரை - 29 | 12-05-2003 | திங்கட்கிழமை | ஓசை 83

வவுனியா நகரில் தரங் குன்றா தங்க நகைகளுக்கு நம்பிக்கை நாணயம் மிக்க நிறுவனம்

கணேசா நகையகம்

வவுனியா.

(சி-7865)





## மாமனிதர் குமார் பொன்னம்பலத்திற்கான

# மாமனிதர் விருதும் ஆவணமும் குடும்பத்தினரிடம் தேசியத் தலைவர் பிரபாகரனால் கையளிப்பு

(கிளிநொச்சி)

**தமிழ் மக்களுக்கு வழங்கிய அயராதசேவையினைப் பாராட்டி தமிழீழத் தேசியத் தலைவர் அவர்கள் உயிர்த்தியாகம் செய்த அமரர்குமார் பொன்னம்பலம் அவர்களுக்கு ஏற்கனவே மாமனிதர் பட்டம் வழங்கிக் கௌரவித்திருந்தார். நேற்று தமிழீழத்தேசியத்தலைவர் அவர்கள் அன்னாரது குடும்பத்தினரைச் சந்தித்து மாமனிதர் என்ற கௌரவம் வழங்கிய மூல ஆவணத்தையும், மாமனிதர் விருதினையும் அவரது குடும்பத்தினருக்கு வழங்கிக் கௌரவித்தார்.**

குமார் பொன்னம்பலம் அவர்கள், பயங்கரவாதத் தடைச்சட்டமும் அவசரகாலச் சட்டமும் தமிழ் மக்களுக்கு எதிராக சிறிலங்கா அரசினால் மிகக்கொடூரமான முறையில் பிரயோகிக்கப்பட்ட வேளையில் அதனை எதிர்த்து தமிழ் மக்களின் உரிமைக்காக சிறிலங்காவின் தலைநகர் கொழும்பிலும் சர்வதேச மன்றுகளிலும் குரல்கொடுத்து அதன் விளைவாகப் பகைமை தேடி சதிகாரர்களால் கொல்லப்பட்டார்.

அமரர் குமார் பொன்னம்பலம் தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் ஆரம்ப காலத்தில் தீவிரபங்கெடுக்காதவராக இருந்துங்கூட, போராட்டத்தின் வளர்ச்சிப்பாதை

(08ஆம் பக்கம் பார்க்க)

## பிரபாகரன் - பீற்றர்சன் சந்திப்பு முயற்சி தொடர்கிறது

### நோர்வே அரசாங்கம் தெரிவிப்பு

கொழும்பு வரவுள்ள நோர்வே வெளியுறவு அமைச்சர் பீற்றர்சனுக்கும் தமிழீழத் தேசியத் தலைவர் வே.பிரபாகரன் அவர்களுக்கும் இடையிலான சந்திப்புக்கான ஏற்பாடுகளை தொடர்ந்து மேற்கொண்டு வருவதாக நோர்வே அரசு நேற்று மாலை வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கலாநிதி அன்ரன் பாலசிங்கம் அவர்கள் வைத்தியசிகிச்சைக்காக லண்டன் செல்கின்ற போதும் ஏற்கனவே ஒழுங்கு செய்யப்பட்ட சந்திப்பு தடைப்படக்கூடாது என நோர்வே விருப்பம் வெளியிட்டுள்ளது. நோர்வே வெளியுறவு அமைச்சர் பீற்றர்சன் வரும் புதன் கிழமை கொழும்புக்கு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## கூட்டமைப்பு பா.உ.கள் தமிழ்ச்செல்வன் சந்திப்பு

தமிழ்க்கூட்டமைப்புப் பாராளுமன்ற உறுப்பினர்கள் நாளை கிளிநொச்சிக்கு வருகைதந்து அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் அவர்களைச் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தவுள்ளனர்.

இன்றைய அரசியல் சூழ்நிலை குறித்து இப்பேச்சுவார்த்தைகள் நடைபெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டிருக்கின்றது. (பா)

## அமெ. உதவி ராஜாங்க அமைச்சர் நேற்று சிறிலங்கா வந்தார்

(கொழும்பு)

அமெரிக்க உதவி ராஜாங்க அமைச்சர் கிறிஸ்ரினா றொக்கா நேற்று பிற்பகல் சிறிலங்காவிற்கு வந்துள்ளார். சமாதான நடவடிக்கைகளுக்கு ஆதரவு வழங்கும் முகமாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் அழைப்பின் பேரில் இவர் இங்கு வந்துள்ளார். கட்டுநாயக்க விமான நிலையம் வந்தடைந்த இவரை அமெரிக்க தூதரக அதிகாரிகள்

(08 ஆம் பக்கம் பார்க்க)

## அரசியல் ஆலோசகர் பாலசிங்கம் நேற்று லண்டன் புறப்பட்டார்!

### உடல் நலக்குறைவு காரணம்

(கிளிநொச்சி)

தமிழீழ விடுதலைப்புலிகளின் அரசியல் ஆலோசகரும் தத்துவாசிரியருமான கலாநிதி அன்ரன் பாலசிங்கம் அவர்கள் அவரது துணைவியார் அடேல் பாலசிங்கம் ஆகியோர் நேற்று பிற்பகல் 2.00 மணியளவில் கிளிநொச்சியில் இருந்து லண்டன் செல்லப் புறப்பட்டுச் சென்றனர்.

சமாதான முயற்சிகள் தொடர்பாக தமிழீழத் தேசியத் தலைவர் அவர்களுடன் கலந்தாலோசிப்பதற்காகவும் சில முக்கிய சந்திப்புக்களை நடத்துவதற்காகவும் கடந்த வாரம் கிளிநொச்சி வந்த இவர் திடீரென ஏற்பட்ட உடல்நலக்

(08ஆம் பக்கம் பார்க்க)



## தமிழ் மக்கள் தங்கள் பாதுகாப்பை தாமே ஏற்படுத்திக்கொள்ள வேண்டும்

### திருமலை மாவட்டத்தளபதி கேணல் பதுமன்

தமிழ் மக்கள் தங்கள் பாதுகாப்பைத் தாமே ஏற்படுத்திக்கொள்ள வேண்டும் என தமிழீழ விடுதலைப் புலிகளின் திருகோணமலை மாவட்ட கட்டளைத் தளபதி கேணல் பதுமன் அவர்கள் தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் திருகோணமலை இறால்குழி பாடசாலையில் அதிகாரிகள் பயிற்சியை நிறைவு செய்து கொண்ட போராளிகளுக்கு சான்றிதழ் வழங்கும் நிகழ்வில் கலந்து கொண்டு உரைநிகழ்த்தும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இன்று சமாதானச் சூழல் நிலவுகின்றது என்பதற்காக நாம் எமது செயற்பாடுகளை நிறுத்திவிட முடி

(08ஆம் பக்கம் பார்க்க)

## அன்ரன் பாலசிங்கம் சென்ற உலங்கு வானூர்தி தாமதம்

விடுதலைப்புலிகளின் அரசியல் ஆலோசகரும், தத்துவாசிரியருமான கலாநிதி அன்ரன் பாலசிங்கம் அவர்கள் சென்ற உலங்கு வானூர்தி காலநிலை சீரின்மை காரணமாக இடையில் தரையிறக்கப்பட்டது. இதனால் அவர்கள் இரண்டு மணி நேரம் தாமதித்தே கட்டுநாயக்காவைச் சென்றடைந்தனர். உடல் நிலையைக

(08 ஆம் பக்கம் பார்க்க)

# யுத்த நிறுத்தம் அமுலில் உள்ளதால் வெளிநாட்டு முதலீடுகள் அதிகரிப்பு

## மத்திய வங்கி அறிக்கை தெரிவிப்பு

யுத்தநிறுத்தத்தின் மூலம் நிலையான சமாதானத்தை அடைவதற்கு அரசாங்கம் உறுதி பூண்டிருப்பதனால் வர்த்தக சமூகத்தினரின் நம்பிக்கையை இது பெரிதும் அதிகரித்துள்ளது என்று மத்திய வங்கி தெரிவித்துள்ளது.

நாட்டின் பொருளாதாரத்தில் மேலும் முக்கிய பங்கை தனியார் துறையினர் வகிப்பதற்கு இந்த இரண்டு விடயங்களும் காரணிகளாக அமைந்துள்ளன. இதற்கு உதாரணமாக வெளிநாடுகளில் இருந்து நேரடியாகக் கிடைத்த முதலீட்டுகளையும், கொழும்பு பங்குச் சந்தையின் உன்னத நடவடிக்கைகளையும் நோக்கமுடியும்.

கடந்த வருடம் 22கோடியே 90 லட்சம் டொலர் பெறுமதியான வெளிநாட்டுநேரடி முதலீடுகள் கிடைக்கப்பெற்றுள்ளன. இலங்கை பெற்றுக்கொண்ட ஆகக்கூடிய வெளிநாட்டு முதலீட்டுத்தொகை இதுவாகும்.

நாட்டின் வெளிநாட்டுச் சொத்துக்களின் மதிப்பு 2002ஆம் ஆண்டு இறுதியளவில் 249 கோடி டொலர்களாக இருந்தது இத்தொகை அடுத்த ஐந்து மாதகால இறக்குமதிக்கு ஈடுசெய்ய போதுமானதாகும் என மத்திய வங்கி வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# முல்லைத்தீவுப் பக்கமாக தாழமுக்கம் நகர்ந்தது

(கொழும்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் இருந்து 800 கிலோ மீற்றர் கிழக்காக வங்காள விரிகுடாவில் நேற்று முன்தினம் காணப்பட்ட தாழமுக்கமானது முல்லைத்தீவுப் பக்கமாக நகர்ந்து வருகிறது என வானிலை அவதானிகள் மையம் தெரிவித்துள்ளது.

இது சூறாவளியாக உருவெடுத்து வடமேற்குத் திசையாக நகர்ந்து நேற்று நண்பகல் முல்லைத்தீவுப் பிரதேசத்தில் இருந்து 650 கிலோ மீற்றர் தூரத்தில் காணப்பட்டது.

தற்போது மேற்கு வடமேற்கு திசையில் நகர்ந்து கொண்டிருக்கிறது.வடக்கு கிழக்கு கடற்பிரதேசத்தில் இடைக்கிடை மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்வதுடன் கடல் பிரதேசம் கொந்தளிப்பாக இருக்கும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

# சுதந்திர வர்த்தக ஒப்பந்தம் செய்ய இலங்கை பொருத்தமான நாடாகும்

## அமெரிக்க வர்த்தகப் பிரதிநிதி தெரிவிப்பு

சுதந்திர வர்த்தக ஒப்பந்தங்களும் அமெரிக்க கொள்கையும் என்ற தலைப்பில் சமீபத்தில் நடைபெற்ற சர்வதேச மாநாடு ஒன்றில் உரையாற்றிய அமெரிக்க வர்த்தகப் பிரதிநிதி அமெரிக்காவுடனான சுதந்திர வர்த்தக ஒப்பந்தத்தைச் செய்து கொள்வதற்கு பொருத்தமான நாடாக இலங்கை விளங்குகின்றது என தெரிவித்துள்ளார்.

அவர் தொடர்ந்து கூறுகையில்: நாடுகளுக்கிடையிலான சிறிய நாடுகள் சம்பந்தப்பட்ட பிராந்திய தேசங்கள் பற்றிய புஷ் நிர்வாகத்தின் கொள்கைகள் துரிதப் படுத்தப்படும் என கூறியுள்ளார். அமெரிக்காவுடன் சுதந்திரவர்த்தக ஒப்பந்தத்தைச் செய்து கொள்வதற்குப் பொருத்தமான நாடாக இலங்கை உள்ளது என்ற அறிவித்தல் தெற்காசிய நாடுகளின் அடிப்படையில் முதலாவதாக விடுக்கப்பட்டதாகும்.

அமெரிக்காவிற்கான சிறிலங்காத் தூதுவர் கருத்து வெளியிடுகையில் அமெரிக்கச் சந்தையில் 200கோடி டொலர் பெறுமதியான வர்த்தகத்தை மேற்கொண்டுள்ள இலங்கை சம்பந்தப்பட்ட மட்டில் இது ஒரு முக்கியமான அறிவித்தலாகும் என கூறியுள்ளார்.

ரணில் 2002 ஆம் ஆண்டு ஜுலை மாதம் வாஷிங்டனில் அமெரிக்க சனாதிபதியைச் சந்தித்த பின்னர் கைச்சாத்திடப்பட்ட அமெரிக்க இலங்கை வர்த்தக மற்றும் முதலீட்டு உடன்படிக்கையின் பெறுபேறாக இது அமைந்துள்ளது என அவர் கூறியுள்ளார். இவ் உடன்படிக்கையில் கைச்சாத்திட்ட முதலாவது ஆசிய நாடு சிங்கப்பூர் என்பது குறிப்பிடத்தக்கது.

# திருமுறிகண்டிப் பகுதியில் டெங்கு ஒழிப்பு நடவடிக்கை

கடந்த 9ஆம் 10ஆம் திகதிகளில் திருமுறிகண்டிப் பகுதியில் டெங்கு ஒழிப்பு நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டுள்ளது.

கிளிநொச்சி சுகாதார வைத்திய அதிகாரியின் தலைமையில் முறிகண்டிப் பகுதியில் டெங்கு ஒழிப்பு மற்றும் பூச்சி ஆய்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு மக்கள் மத்தியில் விழிப்புணர்வு செயற்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

புளியங்குளம், முகமாலை சோதனைச் சாவடிகளால் உள் நுழையும் ஏராளமான வெளிமாவட்ட பயணிகள் இவ்விடத்தில் தரித்துச் செல்வதால் இவ்விடங்களில் டெங்கு நுளம்புகள் உயிர்வாழ்வதற்கான சந்தர்ப்பம் அதிகளவில் இருப்பதனால் நோய் பரவும் சாத்தியம் அதிகமாகும். இதிலிருந்து மக்களைக் காக்கும் வகையிலும் இந்நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டுள்ளது.

இப்பகுதியில் உள்ள விற்பனை நிலையங்கள் வீடுகள் மற்றும் அதனை அண்டிய பகுதிகளில் ஆய்வு மேற்கொள்ளப்பட்டு நுளம்புகள் உயிர்வாழும் பொருட்கள் அதனைத்தும் அழிக்கப்பட்டன. (லோ)

# பிரதேச எழுச்சிப் பேரவையினருக்கான சமகால அரசியல் கலந்துரையாடல்

விசுவமடு பிரதேச எழுச்சிப் பேரவையினருக்கான சமகால அரசியல் நிலை தொடர்பான கலந்துரையாடல் ஒன்று நேற்று முன்தினம் மு/பாரதிபுரம் மகாவித்தியாலயத்தில் இடம் பெற்றுள்ளது.

இக்கலந்துரையாடலில் மாணிக்கபுரம், இளங்கோபுரம் விசுவமடு கிழக்கு, மேற்கு, வள்ளுவர்புரம் ஆகிய பகுதிகளைச் சேர்ந்த கிராம சேவகர், மக்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

இந்நிகழ்வில் சமகாலத்தின் அரசியல் நிலை அதற்கேற்ப மக்கள் எவ்வாறு செயற்பட வேண்டும் என பல்வேறு விடயங்கள் பற்றிச் உரையாடப்பட்டன.

புதுக்குடியிருப்பு பிரதேச உதவி அரசாங்க அதிபர் தயானந்தா தலைமையில் இடம் பெற்ற இந்நி கழ்வில் உரைகளைப் பிரதேச எழுச்சிப் பேரவை செயலாளர் பத்மநாதன், பிரதேசப் பொறுப்பாளர் செழியன் ஆகியோர் நிகழ்த்தினர். (லோ)

# மது போதையில் வாகனம் செலுத்தியவர் காவல்துறையினரால் கைது

ஏ-9 வீதியில் மது போதையில் மோட்டார் சைக்கில் ஓட்டிச் சென்ற சாரதி ஒருவர் தமிழீழ காவல்துறையினரால் நேற்று கைது செய்யப் பட்டுள்ளார். நேற்றைய தினம் மது போதையில் கிளிநொச்சி நகரப்பகுதியில் தள்ளாடிய நிலையில் மோட்டார் சைக்கிள் செலுத்திய சாரதியே தமிழீழ காவல்துறையின், வீதிப் போக்குவரத்துப் பிரிவினரால் சட்ட நடவடிக்கைக்காகத் தடுத்து வைக்கப்பட்டுள்ளார். (லோ)

# பேரிரைச்சலுடன் கிளிநொச்சியை ஊடறுத்துச் சென்ற சுழிக்காற்று

கிளிநொச்சிப் பகுதியை நேற்று முன்தினம் மாலை 3 மணியளவில் சுழிக்காற்று ஒன்று ஊடறுத்துச் சென்றுள்ளது. இச் சுழிக்காற்று பன்னங்கண்டி வீதி யைக் குறுக்கறுத்து அரசாங்க விவ சாய வயல் பிரதேசத்தினூடாக வட்டக்கச்சி வீதியை ஊடறுத்துச் சென்றதைக் காணக்கூடியதாக இருந்தது.

பெரும் சுழியை உருவாக்கி அகப்பட்டவற்றை சுழற்றிச்சுழற்றி மேலெடுத்து விசிறிச் சென்றது. வயல்களில் தேக்கிவைத்திருந்த தண்ணீரைக்கூட சுழற்றி மேலெடுத்தபோது புகை போலக் காட்சியளித்தது. இதைக் கண்டவர்கள் அதன் பின்னே நடந்தும், சைக்கிளிலும் சென்று வினோதக் காட்சியை ஆச்சரியத்துடன் பார் வையிட்டனர்.

## விசுவமடு ப.நோ.கூ. சங்கத்தில்

# போதிய களஞ்சிய வசதியில்லை நெல் கொள்வனவு நிறுத்தம்

(அலுவலக செய்தியாளர்)

விசுவமடு விவசாயிகள் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தில் போதிய களஞ்சிய வசதியின்மையால் விவசாயிகளிடமிருந்து நெல் கொள்வனவு நிறுத்தப்பட்டுள்ளது.

இப்பகுதியில் விவசாயிகளிடம் இருந்து ஒரு மூடை நெல் ரூபா 900 வீதம் ஒரு விவசாயிகளிடம் இருந்து 10 மூடை நெல் கொள்வனவு செய்யப்பட்டு வந்தது. அவ்வாறு கொள்வனவு செய்யப்பட்டு வந்த நெற்சங்கக் களஞ்சியம் யாவும் நிறைந்து விட்டமையால் விவசாயிகளிடம் இருந்தும் கொள்வனவு செய்யப்பட முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. இதனால் இப்பகுதி விவசாயிகளால் உற்பத்தி செய்யப்பட்ட பெருமளவு நெல்லை நியாயமான விலைக்கு விற்பனை செய்யமுடியாத நிலை ஏற்பட்டுள்ளது. (லோ)

# கண்டி வீதி திறக்கப்பட்டபின் 12 வீதி விபத்து மரணங்கள்

(அலுவலக செய்தியாளர்)

யாழ்ப்பாணம் கண்டி வீதி திறக்கப்பட்டதில் இருந்து வீதி விபத்துக்கள் தொடர்ந்த வண்ணமுள்ளதாக காவல்துறையின் வீதிப் போக்குவரத்துப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

கடந்த ஆண்டு ஏப்ரல் மாதம் எட்டாம் திகதி தொடக்கம் இப்பாதை திறந்து விடப்பட்டதிலிருந்து 12 விபத்து மரணங்கள் நிகழ்ந்துள்ளன.

இவற்றுள் வாகனத்தைச் செலுத்தும் சாரதிகளின் கவனயீனத்தாலேயே நிகழ்ந்துள்ளது. அதாவது வாகனங்களை முந்திச் செல்லுதல் சந்திகளில் சைகை காட்டாது திரும்புதல், வாகனத்தில் பொருத்தப்பட்டுள்ள ஒடியை அவதானிக்காமை, நகர்புறங்களில் உரிய வேகத்தில் செல்லாமை அதாவது 30 கி.மீற்றர் வேகம் போன்ற காரணங்களாலேயே இவ்விபத்துக்கள் நிகழ்ந்துள்ளதாக காவல்துறையின் வீதிப் போக்குவரத்துப் பிரிவினர் தெரிவித்துள்ளனர். (பா)

## மாகாண விளையாட்டுப் போட்டி

# கபடி போட்டியில் திருமலை வெற்றி உதைபந்தாட்ட இறுதிப்போட்டி இன்று

வடக்கு கிழக்கு மாகாணத்தில் உள்ள மாவட்ட அணிகள் கலந்து கொள்ளும் கபடி மற்றும் உதைபந்தாட்டப் போட்டிகள் நேற்று இரண்டாவது நாளாக கிளிநொச்சி பொது விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றது.

தமிழீழ காவல் துறை கிளிநொச்சி பணிமனைப் பொறுப்பாளர் ரஞ்சித்குமார் தேசியக் கொடியை ஏற்றி வைத்ததைத் தொடர்ந்து போட்டிகள் ஆரம்பமாகின. கபடி இறுதிப்போட்டியில் திருமலை அணி கிளிநொச்சி அணியை 40-13 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றிபெற்று இவ்வருட சாம்பியனானது.



தொடர்ந்து மட்டக்களப்பு திருமலைஅணிகளுக்கிடையில் நடைபெற்ற முதல் அரையிறுதிப்போட்டியில் திருமலை அணி 2-1 என்ற கோல் எண்ணிக்கையில் வெற்றி பெற்றது.

இப்போட்டியில் மேலதிக நேரத்தில் திருமலை அணி தங்கக்கோல் மூலம் பெற்றமை குறிப்பிடத்தக்கது.

மாலை மன்னார் வவுனியா அணிகளுக்கிடையில் நடைபெற்ற மற்றுமொரு அரையிறுதிப் போட்டியில் மன்னார் அணி 3-1 என்ற கோல் எண்ணிக்கையில் வெற்றிபெற்று இறுதிப்போட்டிக்கு தெரிவாகியது.

இறுதிப்போட்டி இன்று பிற்பகல் 4மணிக்கு திருமலை மன்னார் அணிகளுக்கிடையில் நடைபெறவுள்ளது.



மன்னார் - வவுனியா அணிகளுக்கிடையேயான உதைபந்தாட்டப் போட்டி

# இந்தியாவிற்கு ஐ. நா. பாதுகாப்பு சபையில் நிரந்தர அங்கத்துவமளிக்க பிரிட்டன் வற்புறுத்து!

**ஐக்கிய நாடுகள் பாதுகாப்பு சபையில் இந்தியாவை நிரந்தர உறுப்பு நாடாக இணைத்துக் கொள்வதற்கு பிரிட்டன் ஆதரவு தெரிவித்துள்ளது. அத்தோடு ஜேர்மன் மற்றும் ஜப்பானையும் நிரந்தர உறுப்பு நாடுகளாக இணைக்கவும் வலியுறுத்தப்பட்டுள்ளது.**

ஐக்கிய நாடுகள் சபையை கட்டுப்படுத்தும் இந்த பாதுகாப்பு சபையில் அமெரிக்கா, ரஷ்யா, பிரிட்டன், சீனா, பிரான்ஸ் ஆகிய ஐந்து நாடுகள் நிரந்தர உறுப்பு நாடுகளாக இருக்கின்றன. மேலும் பத்து நாடுகள் தற்காலிக உறுப்பு நாடுகளாகச்சுழற்சி முறையில் அங்கம் வகித்து வருகின்றன.

இந்நிலையில் தன்னையும் நிரந்தர உறுப்பு நாடாக இணைத்துக் கொள்ளுமாறு இந்தியா தொடர்ச்சியாக வலியுறுத்தி வருகின்றது. இதற்கு ரஷ்யா உட்பட பல நாடுகள் ஆதரவு தெரிவித்துள்ள நிலையில் பிரிட்டனும் தற்போது ஆதரவளிக்க முன்வந்துள்ளது. அத்தோடு ஜேர்மனையும், ஜப்பானையும் நிரந்தர உறுப்பு நாடாக இணைக்கவும் பிரிட்டன் வலியுறுத்தியுள்ளது.

அதேசமயம், அமெரிக்கா உட்பட பல ஐரோப்பிய நாடுகள் இது விடயத்தில் தொடர்ந்து மௌனம் சாதித்து வருகின்றமை இங்கு குறிப்பிடத்தக்கது.

## நாளிதழுக்குத் தடை!

சூடான் நீதிமன்றம் ஒன்று அந்நாட்டின் நாளாந்த பத்திரிகை ஒன்றுக்கு இரண்டு மாதகால தடைவிதித்துள்ளது. மேலும் அப்பத்திரிகையின் நிர்வாக ஆசிரியருக்கு ஒரு லட்சம் சூடான் தினார்கள் அபராதம் விதிக்கப்பட்டுள்ளது. இஸ்லாத்தைப் பாதிக்கும் கட்டுரை ஒன்றை வெளியிட்டமைக்காகவே இந்த தடை உத்தரவும் அபராதமும் விதிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.



ஜெப்ட் என்ற இடத்தில் இஸ்ரேலிய புல்டோசர் துவம்சம் செய்த தமது வீடுகளை அவதானிக்கும் பலஸ்தீனச் சிறுவர்கள்

# ஈராக்கிலுள்ள வெளிநாட்டுப் படைகளை அகற்றும் நடவடிக்கைக்கு அணி திரளுங்கள்

## - கடித மூலம் சதாம் வேண்டுகை

ஈராக்கில் முன்னாள் சனாதிபதி சதாமினால் எழுதப்பட்டதாகக கருதப்படும் 06 பக்கங்களைக் கொண்ட கடிதம் ஒன்றை லண்டனில் அரபு மொழி தினசரி நேற்று முன்தினம் வெளியிட்டுள்ளது.

அவர் தனது கடிதத்தில் அமெரிக்கா மற்றும் பிரிட்டிஷ் படைகளுக்கு உதவியளித்த அரபு நாடுகள் சம்பந்தமான பல விபரங்களை வெளியிடுவதற்காக தாம் தயாராயிருப்பதாகவும். அவை வெளியிடப்பட்டவுடன் சம்பந்தப்பட்ட நாடுகள் பெருமளவு பிரச்சினைகளை எதிர் நோக்க வேண்டியிருக்கும் எனத் தெரிவித்துள்ளார்.

சவுதி அரேபியா, குவைத், யோர்தான், ஈரான் ஆகிய நாடுகளை அவர் குறிப்பிட்டுள்ளார். முதல் நடவடிக்கையாக ஈராக்கில் நிலை கொண்டுள்ள வெளிநாட்டு இராணுவத்தை விரட்டியடிப்பதற்கென ஈராக்கிய மக்கள் அணிதிரள வேண்டும் என அவர் கேட்டுள்ளார்.

அமெரிக்க இராணுவம் ஈராக்கை கொள்ளையிட்டுள்ளது எனவும், வங்கிகள் எண்ணெய் வளங்கள் என்பன சூறையாடப் பட்டுள்ளன என அக்கடிதத்தில் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இது போன்ற கடிதமொன்றை சென்ற மாதமும் இந்த அரபு மொழி பத்திரிகைவெளியிட்டமை குறிப்பிடத்தக்கது.

## பிளாஸ்ரிக் கழிவுகளிலிருந்து தமிழகத்தில் வீதி அமைப்பு!

(சென்னை)

தமிழகத்தின் நாமக்கல் மாவட்டம் திருச்செங்கூடு நகராச்சிப் பகுதியில் பிளாஸ்ரிக் கழிவு களைப் பயன்படுத்தி தார்ச் சாலை அமைக்கும் பணி நேற்று முன்தினம் ஆரம்பமாகியுள்ளது.

சுகாதார சீர்கேடுகளை விளை விக்கும் பிளாஸ்ரிக் கழிவுகளில் இருந்து தார்ச்சாலை அமைக்கும் முறை கண்டுபிடிக்கப்பட்டு தற்போது செயற்படுத்தப்பட்டு வருகின்றது.

அதன் படி பிளாஸ்ரிக் பொருட் களை சேகரித்து அதில் தார் கலந்து வீதிகளில் போடப்படு கின்றன.

சாதாரன வீதிகளுக்கு 06 வருட உத்தரவாதம்தான் அளிக்க முடியும். ஆனால் பிளாஸ்ரிக் வீதிகள் 10 வருடங்கள் வரை சேதாரம் இன்றி இருக்கும் என்று கூறப்படுகின்றது.



ஈராக்கின் பாரிய முஸ்லிம் குழுவின் தலைவரான அயதுல்லா – முகமத் பகீர் அல்ஹக்கிம் உரையாற்றும் கூட்டத்தில் அவரின் உருவப்படத்தை ஏந்தி நிற்கும் ஈராக்கியர்.

# காஷ்மீரில் அனைத்து வன்முறைகளுக்கும் முற்றுப்புள்ளி வைக்கப்பட வேண்டும்

## - அமெரிக்க வெளியுறவுத் துணை அமைச்சர்

பிரதமர் வாஜ்பாய் எடுத்துள்ள முயற்சிகள் இந்தியா- பாகிஸ்தானிடையே அமைதி ஏற்பட வழி வகுக்கும் என்று அமெரிக்க வெளியுறவுத்துறை துணையமைச்சர் றிச்சட் ஆர்மிரேச் நம்பிக்கையுடன் கூறியுள்ளார்.

நேற்று முன்தினம் டில்லியில் இந்தியத் தலைவர்களுடன் பேச்சுக்கள் நடத்திய அவர், ஜம்மு-காஷ்மீரில் அனைத்து வன்முறைகளுக்கும் முற்றுப் புள்ளி வைக்கப்பட வேண்டுமெனக் கூறியுள்ளார்.

புதுடில்லியில் பிரதமர் வாஜ்பாய் உட்பட இந்தியத் தலைவர்களுடன் நடத்திய பேச்சுக்கள் குறித்து வெளியுறவு அமைச்சகச் செய்தித் தொடர்பாளர், செய்தியாளர்களிடம் பேசியுள்ளார்.

எல்லை கடந்த பயங்கரவாதத்தை நிறுத்துவது எனும் தனது உறுதிமொழியை பாகிஸ்தான் முதலில் செயலில் காண்பித்து மீண்டும் பேச்சுவார்த்தைகளை தொடங்குவதற்கு ஏற்ப சூழலை உருவாக்க வேண்டும். இதை அமெரிக்காவுக்கு இந்தியா மிகத் தெளிவாகக் கூறிவிட்டது என்று அவர் கூறியுள்ளார்.

பாகிஸ்தான் மண்ணிலிருந்து செயற்படும் பயங்கரவாத அமைப்புக்களை நிறுத்த வேண்டும் என்று நாம் பாகிஸ்தானிடம் கூறி இருக்கின்றோம். ஆர்மிரேச் இது பற்றி பாகிஸ்தான்தலைவர்களுடன் பேசியுள்ளார் என்றும் அவர் கூறியுள்ளார்.

## கொலரா அச்சுறுத்தல்!

(பாக்தாத்)

ஈராக்கின் பாஃக்ரா நகரில் 17 பேருக்கு கொலரா நோய் இருப்பதாகச் சந்தேகிக்கப்பட்டதையடுத்து, அங்கு கொலரா பரவும் சாத்தியம் உள்ளதாக உலக சுகாதார நிறுவனம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

ஈராக்போரில் தண்ணீர் விநி யோகம் சுகாதார அமைப்புக்க ளில் ஏற்பட்ட சீர்கேடுகள் தான் இதற்குக் காரணம் என்று மருத்துவர்கள் கூறுகின்றனர். மேலும் நிலவும் நிலைமை களை எதிர்கொள்ள மருத்துவ மனைகளில் போதிய வசதிகள் இல்லை என்றும் கூறப்படுகின்றது.



தெற்காசியாவிற்கான விஜயத்தில் இறுதியாக இந்தியாவில் கால்வைத்த ஆர்மிரேஜ் வாஜ்பாயு டன் உரையாடுகிறார்.

## தென்கொரிய சனாதிபதி அமெரிக்கா பயணமானார்

தென்கொரிய சனாதிபதி நேற்று அமெரிக்கா சென்றுள்ளார்.


வடகொரியாவில் அணுசக்தி திட்டங்களை தடுத்து நிறுத்தக் கூடியவகையில் அமெரிக்காவுடன் பொதுவான கொள்கைகளை உருவாக்குவதே இவ்விஜயத்தின் நோக்கமாகும்.

அமெரிக்காவிற்கும் தென்கொரியாவிற்குமிடையேயான உறவுகளில் ஏற்பட்டுள்ள கசப்பை போக்குவது இவ்விஜயத்தின் மற்றைய குறிக்கோள் என செய்திகள் தெரிவிக்கின்றன.

## சோனியாகாந்தி – சிதம்பரம் புதுடில்லியில் சந்தித்துப் பேச்சு

காங்கிரஸ் தலைவர் சோனியாகாந்தியை காங்கிரஸ் ஜனநாயக பேரவைத் தலைவரும், முன்னாள் மத்திய அமைச்சருமான ஆர். சிதம்பரம் புதுடில்லியில் சந்தித்துப் பேசியுள்ளார்.

தமிழ் நாட்டில் அ.தி.மு.க., தி.மு.க.வுக்கு மாற்றாக காங்கிரஸ் உள்ளிட்ட கட்சிகளை மூன்றாவது அணியை உருவாக்க வேண்டும் என்று சிதம்பரம் வலியுறுத்தி வரும் நிலையில் இச்சந்திப்பு முக்கியத்துவம் பெறுகின்றது. சோனியா சிதம்பரம் சந்திப்பு தமிழக அரசியல் வட்டாரத்தில் பல புதிய மாற்றங்களை ஏற்படுத்தும் என்றும் கூறப்படுகின்றது.



அண்மையில் சூரியனுக்கும் பூமிக்குமிடையே பிரயாணம் செய்த புதன் கோளின் வடிவம் அமெரிக்க விண்வெளி ஆராய்ச்சி நிலையமான நாஸாவினால் இப்படம் எடுக்கப்பட்டது.



குவாட்டமாலா நகரில் மாணவர்களின் ஆர்ப்பாட்டம் ஒன்றில் டயர் எரிக்கப்படுவதையும் சிறுவன் ஒருவன் ஓடிச் செல்வதையும் படத்தில் காண்கிறீர்கள்

தமிழ் மக்கள் தமது சொந்த இடங்களையும், சொத்து சுகங்களையும் இழந்து பாரிய இடப் பெயர்வுகளைச் சந்தித்து மீண்டும் தற்போது ஓரளவுக்கு தமது சொந்த இடங்களில் அவர்கள் மீளக் குடியேறிக் கொண்டிருக்கும் காலம் இது.

இவ்வாறு மீளக்குடியேறிவரும் மக்களுக்கு உணவு, உடை, உறையுள், உட்பட சுகாதாரம், கல்வி, பொருளாதார அடிப்படை என சகல நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட வேண்டிய கட்டாய தேவை உள்ளது.

# மீள்குடியமர்வும்

இராணுவ ஆக்கிரமிப்பில் இருந்து தமிழீழ தாயகப் பிரதேசத்தின் பகுதிகள் விடுதலைப் புலிகளின் பாரிய தாக்குதல்களால் மீண்டும் மீட்கப்பட்டு அவை மக்களின் வாழ்வுக்காக வழங்கப்பட்டுள்ளன.

அத்துடன் புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் பின்னர் ஏற்பட்ட இணக்கப்பாடுகளின் பிரகாரமும் மக்கள் தமது சொந்த மண்ணில் குடியேறி வருகின்றனர்.



இவ்வாறான தேவைகளுக்கான வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டாலே அவர்கள் தமது வாழ்க்கையினை ஆரம்பத்தில் இருந்து தொடர முடியும்.

இடம்பெயர்ந்து மீளக் குடியேறுவோருக்கான மீள் குடியமர்வு நிதி கொடுப்பனவு, பண்படுத்தல், உபகரணம், வீட்டுப் பாவனைப்பொருட்கள், சுயதொழில் உதவிகள் என இவர்கள் மீள் குடியமர்வுக்கான வசதிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இந்த உதவிகள் அவர்களுக்கு மிக அவசியமானதும் அவர்களின் தேவை உணர்ந்து மேற்கொள்ளப்படும் ஒரு நடவடிக்கையாகவும் உள்ளது.

தமது வாழ்க்கையினை அடிப்படையில் இருந்து ஆரம்பிப்பதற்காக காலத்தின் தேவை உணர்ந்து இந்த உதவிகளைச் செய்பவர்களையும், செய்ய முன்வருபவர்களையும், இந்த மக்கள் நன்றி உணர்வுடன் நோக்குகின்றனர்.

ஆனால் இந்த உதவிப் பணிகள் அவர்களை எவ்வளவு தூரத்துக்கு முழுமையானதாகவும் திருப்திகரமானதாகவும் சென்றடைகின்றது என்பதில் அவர்களுக்குப் பலத்த சந்தேகங்கள் நிலவுகின்றன.

இவ்வாறான சந்தேகங்கள் அவர்களை ஆட்கொள்வதற்கு நடந்து முடிந்த உதவிக்கொடுப்பனவுகள் சென்றடைந்த விதமே காரணமாக அமைகின்றது.

இந்நடவடிக்கைகளில் அரச, அரச சார்பற்ற சர்வதேச, உள்ளூர், நிறுவனங்கள் என பலதரப்பட்டவர்களும் ஈடுபட்டு வருகின்றனர்.

மேலும் அடுத்தமுறை வழங்கப்பட்ட வேறு ஒரு கொடுப்பனவில் பதிவுசெய்யப்பட்டவர்களில் ஒரு தொகுதியினருக்கு உதவிகள் வழங்கப்படவில்லை. பிறிதொரு தினத்தில் வேறு இடத்தில் வைத்து வழங்கப்படுவதாகக் கூறுப்பட்ட போதிலும் இதுவரை வழங்கப்படவில்லை.

மேலும் ஒரு சிறு உதவிக்கொடுப்பனவின் போது அன்று நடந்த சம்பவம் தான் சுவாரசியமானது. குறிப்பிட்ட ஒரு நிறுவனம் அந்த உதவியினை வழங்குவதற்காக இவை வழங்கப்படுவதற்கு சிலமணி நேரங்களுக்கு முன்னர் அக்கிராம சேவையாளரை அணுகி உதவிகள் வழங்கப்படும் தகவலை வெளியிட்டது. உடனடியாக அங்கிருந்த சிறு பாடசாலை மாணவர்கள் மூலம் உரப்பை ஒன்றுடன் குடும்பத்துக்கு ஒருவரை பாடசாலைக்கு வருமாறு தகவல் அனுப்பப்பட்டது.

தகவல் ஒருபுறம் வீடுகளுக்குப் பறக்க மறுபுறம் அங்கு வந்து நின்ற பாரவூர்தியில் இருந்த உதவிப் பொருட்கள் உடனடியாக பதிவு மேற்கொள்ளப்பட்டு மக்களுக்கு வழங்கப்பட்டது.

இவ்வாறு திடீர் தகவல் அனுப்பி வழங்கப்பட்ட உதவியில் கூட இறுதியாக வந்த ஒரு தொகுதி குடும்பங்களுக்கு உதவிகள் கிடைக்காது ஏமாற்றத்துடன் திரும்பினர்.

மேலும் ஒரு சந்தர்ப்பத்தில் இவ்வாறு உதவி வழங்கப்படும்போது இறுதியாக நின்றவர்களுக்கு உதவி கிடைக்காததால் அவர்கள் பாரவூர்தியை மறித்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டபோது தந்திரமாக அவர்களை ஒருபகுதிக்குப் பதிவு செய்வதற்காக அனுப்பிவிட்டு மறுபுறத்தில் பாரவூர்தியை விரைவாக நகர்த்திச் சென்ற சம்பவம் இடம்பெற்றுள்ளது.

வேறு ஒரு கிராமத்தில் அக்கிராம மக்கள் முதலிலேயே அக்கிராம தேவையினையும், வந்துள்ள உதவிகளையும். ஒப்பிட்டுப் பார்த்து உதவிக் கொடுப்பனவு முழுமையாக மேற்கொள்ள முடியாத அளவுக்கு பொருட்கள் வந்திருப்பதை உணர்ந்து ஒற்றுமையாக ஈடுபட்டதால் வந்த பொருட்கள் சகலருக்கும் பங்கிட்டு வழங்கப்பட்ட சம்பவமும் இடம்பெற்றுள்ளது.

மேலும் ஒரு கிராமத்தில் தன்னிச்சையாகவே ஒரு நிறுவனத்தினர் இறங்கி புள்ளிவிபரங்களைத் திரட்டி உதவிகள் வழங்கி உள்ளனர். இதில் பாதிக்கப்பட்டவர்கள் இருக்க, அப்பிரதேசத்தில் இல்லாதவனுக்கு உதவிகள் சென்றடைந்த சம்பவம் உண்டு.

எது எவ்வாறு இருப்பினும் இது தொடர்பாக ஆராய்ந்தபோது உதவிபுரிய வருபவர்கள் குறிப்பிட்ட ஒரு கிராமத்துக்கேனும் முழுமையாக உதவி வழங்கக் கூடிய நிலையில் வருவதில்லை என்றே பலதரப்பட்டவர்களாலும் தெரிவிக்கப்பட்டது.

உதவிகள் என்பது கட்டாயம் தேவையானதுதான்

# உதவிகளும்

ஒன்றுக்கு மேற்பட்ட பல இடப்பெயர்வுகளைத் தொடர்ச்சியாகச் சந்தித்துப் பல பிரதேசங்களிலும் அலைந்து திரிந்து தமது பொருளாதார வளங்கள் அனைத்தையும் கரையவிட்டு வெறும் உயிர்தாங்கிய உடல்களுடனேயே இந்த மக்கள் தமது பகுதிகளில் மீளக்குடியேறி வருகின்றனர்.

விவசாயம், வர்த்தகம், கடற்தொழில், கூலித்தொழில்கள் என பல்வேறுபட்ட தொழில்களில் ஈடுபட்ட மக்களே இவ்வாறான இடப்பெயர்வுகளுக்கு முகம்கொடுத்து தமது இடர்பட்ட வாழ்க்கையினை மேற்கொண்டிருந்தனர்.

இவர்கள் தமது பகுதிகளுக்கு மீளக்குடியேறிவரும் இக்காலத்தில் தமது வாழ்க்கையினை மீண்டும் பூச்சியத்தில் இருந்தே ஆரம்பிக்க வேண்டிய நிலையில் உள்ளனர்.

தமது வாழ்க்கை மீண்டும் பூச்சியத்தில் இருந்துதான்

**ஜெயக்குமார்**

ஆரம்பிக்கப்பட வேண்டுமாக இருந்தாலும் அவர்கள் தமது பகுதிகளில் மீளக்குடியேறுவதில் எவ்வித தயக்கமும் காட்டுவதில்லை.

சொந்த மண்ணில் தாம் மீளக் குடியேறுகின்றோம் என்கின்ற அந்த ஆத்ம திருப்தியே அவர்களின் மீளக்குடியேற்றத்தின் உந்து சக்தியாக இருக்கின்றது.

இந்த உதவிகள் சில வேளைகளில் அவர்களை முழுமையாகச் சென்றடைந்தாலும் பல சந்தர்ப்பங்களில் மக்களை விசனமடையச் செய்யும் அளவுக்கு கொடுப்பனவு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இதற்கு உதாரணமாக நெடுங்கேணிப் பிரதேசத்தில் நடந்த ஒரு சில சம்பவங்களை எடுத்துக்காட்டாகக் கொள்ள முடியும்.

வெவ்வேறுபட்ட உதவிகள் என மூன்று வகையான உதவிகள் ஒரு குறிப்பிட்ட பகுதிக்கு வழங்கப்பட்டுள்ளது. ஆனால் அம்மூன்று கொடுப்பனவுகளையும் அக்கிராம மக்கள் முழுமையாகப் பெற்றுக் கொண்டதாக இல்லை.

ஒருதடவை வழங்கப்பட்ட கொடுப்பனவின் போது பதிவு செய்தவர்களுக்கு மட்டும் என உதவிகள் வழங்கப்பட்டன.

பதிவுகளை மேற்கொள்ளத்தவறியவர்கள் உதவிபெற முடியாத நிலைக்குத் தள்ளப்பட்டனர். மக்கள் மீளக் குடியமர்வு என்பதால் மக்கள் மீளக் குடியமரும் போதே பதிவுகளை மேற்கொள்ள முடியும். ஆனால் உதவிகள் அதன்பின் காலம் கடந்து கிடைப்பதால் இவ்வாறான நெருக்கடி நிலைக்குத் தொடர்ந்தும் தள்ளப்படுகின்றனர்.

அதற்காக அவை சாட்டுப்போக்கிற்காகவும் அறிக்கை சமர்ப்பிப்பதற்காகவும் செய்யப்படவேண்டியதில்லை. பாதிக்கப்பட்டவர்களை மேம்படுத்துவதற்காக சரியான முறையில் அது அவர்களைச் சென்றடைய வேண்டும்.

உதவிவழங்குவோர்களின் இந்த நடவடிக்கையினால் கிராமசேவையாளர்களுக்கும் மக்களுக்கும் இடையே தேவையற்ற கசப்புணர்வும் முறுகல்நிலையுமே தோற்றுவிக்கப்படுகின்றது.

பாவம் "மத்தளம்போல் இருபக்கமும் அடிவாங்கும்" கிராமசேவையாளர்கள் என்னசெய்ய முடியும். "எய்தவன் இருக்க அம்பைநொந்து" என்ன செய்வது.

எது எப்படி இருப்பினும் உதவிகள் விரைவாகவும் முழுமையாகவும் மக்களைச் சென்றடைய வேண்டும். இதற்குச் சரியான திட்டமிடலும் பூரண உதவிக்கான தயார்ப்படுத்தலும் தேவை.

இல்லையேல் உதவிகள் செய்வதாக கூறிக்கொண்டு பல உபத்திரவங்களை மக்களிடையே ஏற்படுத்தி விட்டு செல்வதாகவே அமையும். இவ்விடயத்தில் பாதிக்கப்பட்ட மக்கள் மேலும் பாதிக்கப்படாது சம்பந்தப்பட்ட சகலரும் இதில்தீவிர அக்கறைசெலுத்தவேண்டும். இது அந்த மக்களின் தற்போதைய தேவையும் ஆகும்.

# பிந்துனுவெவ படுகொலை வழக்கின் தீர்ப்பு ஜூன்—11 ல் வெளியிடப்படும்

(கொழும்பு)

பண்டாரவளை பிந்துனுவெவ தடுப்பு முகாம் படுகொலை வழக்கு விசாரணையின் தீர்ப்பு ஜூன் மாதம் 11 ஆம் திகதி வழங்கப்படும் என்று கொழும்பு மேல நீதிமன்றம் அறிவித்துள்ளது.

இந்த வழக்கு கொழும்பு மேல் நீதி மன்றத்தில் ட்ரயல் அட்பார் முறையில் 03 நீதிபதிகள் முன்னிலையில் விசாரணை செய்யப்பட்டு வந்தது.

கடந்தவியாழக்கிழமை விசாரணை முடிவில் மேல் நீதிமன்றம் தீர்ப்பு வழங்கப்படும் திகதியை அறிவித்தது.

தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் கீழ் இயங்கிவந்த பிந்துனுவெவ புனர்வாழ்வு முகாமில் தங்கியிருந்த 27 தமிழ்க்கைதிகள் 2000 ஆம் ஆண்டு ஒக்டோபர் 25 ஆம் திகதி படுகொலை செய்யப்பட்டதாகவும் 14 கைதிகளுக்கு படுகாயம் விளைவித்ததாகவும் 18 பேருக்கு எதிராகக் குற்றம்சாட்டி இந்த வழக்குத் தொடரப்பட்டிருந்தது. 18எதிரிகளில் 09 பேர் பொலிசார் ஆவர். ஏனையவர்கள் பிந்துனுவெவ கிராம வாசிகளாவர்.

போதிய சாட்சியங்கள் இல்லாத காரணத்தால் ஏற்கனவே குற்றம் சாட்டப்பட்டிருந்த 23 சந்தேகநபர்கள் விடுதலை செய்யப்பட்டிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# 'டிப்ளோமா' பெற்றவருக்கு சுயவிருப்பின் பேரில் நியமனம்

(கொழும்பு)

வவுனியா, மட்டக்களப்பு, யாழ்ப்பாணம் கல்வியியற் கல்லூரிகளில் தேசிய டிப்ளோமாபட்டம் பெற்று வெளியேறியோர் தங்களது சொந்த மாவட்டங்கள் தவிர்ந்த ஏனைய மாவட்டங்களில் தொழில்புரிய விரும்பினால் நியமனங்கள் வழங்கப்படுமென கல்வியமைச்சர் கருணாசேன கொடித்துவக்கு தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் நடைபெற்ற கல்வி, கலாசார ஆலோசனைக் குழுக்கூட்டத்தில் ஜோசப் பராராசசிங்கம் முன்வைத்த கோரிக்கையையடுத்து இம்முடிவு எடுக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டிருந்தது. இருப்பினும கஸ்ரப்பிரதேசங்களிலிருந்து தொழில்புரிய விரும்புபவர்களுக்கு அவர்கள் விரும்பும் பகுதிகளிலேயே நியமனங்கள் வழங்கப்படும் என்றும் அமைச்சர் குறிப்பிட்டார்.

# பொருத்தமான கல்வியை வழங்க விரிவான சிந்தனை மனப்பாங்கு தேவை

சிறுவர்களுக்கு கல்வியை வழங்குவதற்குத் தான் கல்விச் சமூகம் இருக்கின்றதே தவிர, கல்விச் சமூகத்திற்காக சிறுவர்கள் இல்லை. ஆகவே, சிறுவர்களுக்கு பொருத்தமான கல்வியை வழங்கவென வந்த கல்விச் சமூகத்தினருக்கு சிறுவர்களின் உரிமையை நிலை நிறுத்துவதற்கான ஒரு விரிவான சிந்தனை தேவை ஆகும் எனத் தெரிவித்தார் வடக்கு– கிழக்கு மாகாண மேலதிக கல்விப் பணிப்பாளர் ச. சுப்பிரமணியம் அவர்களுடனான செவ்வியின் விபரம் வருமாறு :-

□ ஆசிரியர் ஆட்சேர்ப்பிற்காக அரசாங்கத்தினால் கடைப்பிடிக்கப்படும் கொள்கைகள் எவை?

புதிய கல்விச் சீர்திருத்தத்தில் ஆசிரியர் ஆட்சேர்ப்புத்தொடர்பாக முன்வைக்கப்பட்டுள்ளகொள்கை,ஆசிரியராக நியமிக்கப்படுபவர் ஏற்கனவே அந்தத் துறையில் பயிற்சி பெற்றவராக இருக்க வேண்டும் என்பதாகும். அந்தக் கொள்கை அடிப்படையில் தான் இன்று நாடு முழுவதும் 17 தேசிய கல்வியியற் கல்லூரிகள் அமைக்கப்பட்டுள்ளன. இவற் றிற்கு க.பொ.த. உயர்தர பரீட்சையில் சித்திய டைந்தவர்களில் இருந்து உயர் புள்ளி அடிப்படையில் குறிப்பிட்ட விகிதாசாரத்தினரை தெரிவு செய்து அவர்களுக்குத் தேசிய கல்வியியற் கல்லூரிகளில் இரண்டு வருட வதிவிடப் பயிற்சியினையும், ஒரு வருட உள்ளகப் பயிற்சியினையும் வழங்கிய பின்பு அவர்களையே ஆசிரியர்களாக நியமிப்பது பொருத்தமானது என சிபார்சு செய்யப்பட்டுள்ளது.

எவ்வித பயிற்சியும் பெறாத ஒருவரை ஆசிரியராக நியமித்து கற்பித்தலை மேற்கொள்ள அனுமதிக்கும்போது அவரின் கற்பித்தல் திறமை, அனுபவம் குறைவாகத்தான் இருக்கும்.

அதனால் தான் பயிற்றப்பட்டவர்கள் தான் பாடசாலைகளுக்கு ஆசிரியராக நியமிக்கப்பட வேண்டும் என்ற கொள்கை கொண்டு வரப்பட்டுள்ளது. பட்டதாரிகளுக்கு கூட அவர்கள் பட்டப்பின் கல்வி டிப்ளோமா முடித்தால் தான் ஆசிரியர் நியமனம் வழங்கலாம். பல்கலைக்கழகத்திலிருந்து வெளியேறுபவர்கள் எல்லோருக்கும் ஆசிரிய நியமனம் வழங்குவது என்றால் அது நடைமுறைக்குச் சாத்தியமற்றது. ஆசிரியர் தேவைக்கு அமைவாகத்தான் ஆசிரியர் நியமனம் செய்யலாம். எல்லாப் பட்டதாரிகளுக்கும் ஆசிரிய வேலைதான் என்பது பொருத்தப்பாடில்லை.

பட்டதாரிகள் வேலையில்லாமல் இருப்பதற்கு பல காரணங்கள் உண்டு. அவற்றுள் பிரதானம் அனுபவம் போதாது இருப்பதாகும். வேலை உலகிற்கு ஏற்ற தகுதியுடன் அவர் வெளிவரவில்லை. சிலதுறைகளில் தகுதியுடன் வெளிவரலாம். ஆசிரியத்துறையில் பட்டதாரி என்றால் ஆசிரியர் என்ற கருத்தில்லை. பட்டதாரி பட்டப்பின் கல்வி டிப்ளோமா முடித்தால்த்தான் தராதரம் பெற்ற ஆசிரியராக கணிக்கப்படுகின்றார். பட்டப்பின் கல்வி டிப்ளோமா முடிக்காத வரை அவர் ஒரு பயிற்றப்படாத ஆசிரியர் என்ற நிலையிலேயே இருப்பார். எந்தத் துறைக்கும் தொழில்சார் தேர்ச்சி என்பது அவசியமானதாகும்.

□ ஆசிரியர் பற்றாக்குறை கிராமப் புறப்பாடசாலைகளில் தான் பெருமளவில் நிலவுகின்றது. ஆசிரியர் இடமாற்றங்கள் வருடா வருடம் மேற்கொள்ளப்பட்டு வருகின்ற போதிலும் கூட கிராமப்புற பாடசாலைகளுக்கு ஆசிரியர்கள் இடம்மாற்றப்படுவது மிகக்குறைவாக உள்ளது. நகர்ப்புறப் பாடசாலைகளில் கடமையாற்றுபவர்கள் தொடர்ந்தும் நகர்ப்புறப் பாடசாலைகளிலேயே கடமையாற்ற கிராமப்புறப் பாடசாலைகளில் கடமையாற்றுபவர்கள் தொடர்ந்தும் கிராமப் புறப் பாடசாலைகளிலேயே கடமையாற்றுகின்றனர். இதற்கு மாற்று ஏற்பாடுகள் ஏதாவது செய்யப்பட்டுள்ளனவா?

கல்விக் கொள்கையைப் பொறுத்தஅளவில் வளப்பங்கீடு என்பது சமமாக இருக்க வேண்டும். வடக்கு-கிழக்கு மாகாணத்தில் உள்ள ஆசிரியர் மாணவர் விகிதத்தையும் தெற்கில் உள்ள ஆசிரியர் மாணவர் விகிதத்தையும் ஒப்பிட்டு நோக்கவேண்டும். ஆசிரியர் மாணவர் விகிதம் தெற்கில் 1:25 என்ற நிலையில் இருக்க, வடக்கு-கிழக்கில் 1:40 என்ற நிலையில் உள்ளது. சில பிரதேசங்களில் 1:50,1:60 என்ற விகிதமும் உண்டு. வடக்கு - கிழக்கின் சில நகர்ப்பிரதேசத்தில் 1:25 என்ற விகிதமும்உண்டு. இடமாற்றங்களைச் செய்வது வடக்கு-கிழக்கு நிர்வாகம் தான்.

ஏறத்தாழ 10 வருடங்களுக்கு முன்னர் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை முடித்து வருபவர்கள் வெளிமாவட்டங்களுக்குச் சென்று ஐந்து வருடங்கள் சேவையாற்ற வேண்டும் என்ற நிபந்தனை அடிப்படையில் சேவையாற்றிவிட்டு பின்னர் இடமாற்றங்களைப் பெற்று தனது சொந்த கிராமத்திற்கு வந்து சேவையாற்றினார்கள். ஆனால் பின்னர் நிலவிய அரசியல் சூழ்நிலைகாரணமாக பாதுகாப்புக் கருதியும், வசதிவாய்ப்புக் கருதியும் தமது பிள்ளைகளின் கல்வி வசதியைக் கருதியும் பல ஆசிரியர்கள் நகர்ப்பிரதேச பாடசாலைகளில் கடமையாற்ற முன்வந்தனர். கடமையும் ஆற்றுகின்றனர்.

மாவட்ட அல்லது பிரதேச ரீதியில் தெரிவு செய்யப்பட்ட ஆசிரியர்கள் நகர்ப் பிரதேசத்தை வதிவிடமாகக் கொண்டாலும் கூட நிர்ப்பந்தத்தின் பேரில் கிராமப் புறத்திற்குச் சென்று சேவையாற்றுகின்றனர். மாகாணக் கல்வி அமைச்சு குறைந்தது 8 வருடங்கள் கிராமப்புற பாடசாலைகளில் கடமையாற்றியவர்களை அவர்களின் சுயவிருப்பின் அடிப்படையில் அவர்கள் விரும்பிய இடத்திற்கு இடமாற்றம் செய்துகொண்டு வருகின்றது. இதேவேளை நகர்ப்பிரதேசத்தில் கடமையாற்றிய வரை கிராமப்புறத்திற்கு இடமாற்றம் செய்யும் போது அவர் அனுபவித்த சுகத்தை இழக்க விருப்பம் இன்மையால் அவர் குறுக்கு வழியைக் கையாளுகின்றார். அவர் அரசியல்வாதிகளின் செல்வாக்கினாலோ அன்றி தொழிற்சங்க செல்வாக்கினாலோ அன்றி மருத்துவ காரணங்களினாலோ நகரைவிட்டு இடம்மாறாமல் இருக்க வழி தேடுகின்றார். இவர்கள் தமது வசதி வாய்ப்புக்கருதி கிராமப்புறப் பாடசாலைகளுக்குச் சென்று கடமையாற்ற முடியாது என்பது ஏற்றுக கொள்ளக் கூடியதொன்றல்ல. அதேமாதிரி அவ்வாறானவர்களுக்கு இடம் மாற்றம் வழங்காது இழுத்தடிப்புச் செய்வதும் , இட மாற்றம் செய்யாமல் விடுவதும் நிர்வாக ரீதியாக ஏற்றுக்கொள்ளக் கூடியதொன்றல்ல.



போதியளவு ஆசிரியர்கள் இருப்பார்களாயின் இந்தப் பிரச்சினைகளும் ஓரளவிற்கு தீர்க்கப்படலாம். நிர்வாக ரீதியான சில கட்டுபாடுகளும் அமுலுக்குக் கொண்டு வர வேண்டி உள்ளன. ஏனெனில் கிராமப் புறத்தில் உள்ள மாணவர்களின் கல்வி உரிமையை யாரும் பறிக்க முடியாது. உண்மையிலேயே சிறுவர்களுக்கு கல்வியை வழங்குவதற்குத்தான் கல்விச்சமூகம் இருக்கின்றதே தவிர கல்விச் சமூகத்திற்காக சிறுவர்கள் இல்லை. ஆகவே சிறுவர்களுக்குப் பொருத்தமான கல்வியை வழங்கவென வந்த கல்விச் சமூகத்தினருக்கு சிறுவர்களின் உரிமையை நிலைநிறுத்துவதற்கான ஒரு விரிவான சிந்தனை மனப்பாங்கு தேவை. மிகக் குறுகிய வட்டத்தில் இருந்துகொண்டு சிந்தித்து அதனை நியாயப் படுத்துவதனை எந்த விதத்திலும் ஏற்றுக் கொள்ள முடியாது. அதற்கு ஒரு இறுக்கமான நடைமுறை தேவை. என்று தான் நாம் சொல்ல வேண்டும்.

நேர்காணல்:-
கண்டாவளையூர்
**ஆறு. சுபாஸ்கரன்**
(வவுனியா செய்தியாளர்)

# தமிழ்மொழி விடுதலை பெற வேண்டும்; தமிழ், இனத்தை தாயாக நேசிக்கின்றேன்!

## வரலாற்றாய்வாளர் முனைவர் கு. அரசேந்திரன்

தமிழை நேசித்து படிக்கின்ற ஒரு மாணவனான நான். தமிழ் விடுதலை பெறவேண்டும் என்ற கருத்தில் தமிழையும், தமிழ் இனத்தையும் தாயாக நேசிக்கின்றேன். இவ்வாறு கிளிநொச்சியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற 'கல்' சொல்லாய்வு நூல் அறிமுக விழாவில் நூலாசிரியரான வரலாற்றாய்வாளர் முனைவர் கு. அரசேந்திரன் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது, தமிழைப் படித்திருக்கின்றேன். அத்தோடு, தமிழோடு சேர்த்து வாழுகின்றநிலையைப்பெற்றிருக்கின்றேன். இந் நூலை அறிமுகம் செய்து கொள்வதோடு, எமது தேசியத் தலைவர் பிரபாகரன் அவர்களை இன்று உலகம் எவ்வளவோ நேசிக்கின்றது. அது போல நானும் அவரை நேசிக்கின்றேன். முன்பு செயல் அடுத்தது சொல் என்பது தலைவருடைய கொள்கை என நான் நினைக்கின்றேன்.

எனது பணியை என்னை - இங்கு அளவுக்கு அதிகமாக புகழ்ந்திருக்கின்றனர். தலைவனூடாக கட்டளையை ஏற்று நடக்கின்ற தளபதிகள், போராளிகள், எமது மக்கள் எல்லோருக்கும் உங்களது திருவடியை தொட்டு வணக்கம் செய்து கொள்கின்றேன்.

1972ஆம் ஆண்டு இளங்கலை பயிலத் தொடங்கிய நாளில் இருந்து 2003ஆம் ஆண்டு வரை முப்பது ஆண்டுகள் முழுமையாக கற்று வருகின்றேன். ஒரு நல்ல மாணவனாக தமிழை நேசித்துப் படிக்கின்ற ஒரு மாணவனான நான் தமிழ் விடுதலை பெற வேண்டும் என்ற கருத்தில் தமிழையும். தமிழ் இனத்தையும் தாயாக நேசிக்கின்றவர்களில் நானும் ஒருவன்.

அந்த அடிப்படையில் தமிழ் என்கின்ற என் தாய்மையை உலக மொழிகளையெல்லாம் ஈன்றெடுத்த தாய் என்ற உலக உண்மையை தமிழ் பற்றினால் அல்ல, நாவினாலும் உரசிப்பார்த்து நான் இந்த உண்மையை உணர்ந்தவன்.

தமிழில் அறிந்து கொள்ள இன்னும் எவ்வளவு இருக்கின்றது. நாம் எம்மை தமிழர் என்று சொல்லிக் கொள்ளலாமா என்று ஒரு கேள்வி கேட்டுப் பார்க்கின்றபோது அதன்போது ஒரு துணிச்சல் வராது தன்னை ஒரு தமிழன் என்று சொல்லிக் கொள்ள அந்த வகையில் ஒரு நூல் எழுதிய காரணத்தால் நான் என்னைப் பெரிய தமிழ் அறிஞன் என்று சொல்லிக் கொண்டால் என்னைவிட தமிழை அறிந்தவன் யாரும் பொறுத்திருக்க முடியாது.

தமிழை அறிந்தவன், தமிழின் ஆழத்தை அகலத்தை பரப்பை உலகம் முழுவதுமாக விரிந்து கிடக்கின்ற நுட்பத்தை ஒவ்வொரு நாளும் உழைத்து உழைத்து ஒரு சிறிய ஒளியை, ஒரு சிறு ஒளிக்கீற்றை வாழ்த்துகின்றபோது மிகவும் மகிழ்ச்சியாக உள்ளது என்றால் அடக்கத்திற்காக நான் என்னை ஒரு தமிழ் அறிஞனாக சொல்லிக் கொள்ளவில்லை.

தமிழ் அறி ஞன் என்று சொல்லிக் கொள்வதற்கு பாவானராகஇருக்க வேண்டும். அந்த அளவிற்கு நமது மொழி பெரியது, சிறந்தது, செம்மையானது, உலக மொழிகளுக்கு எல்லாம் தாயானது என்று நாம் விளங்கிக் கொண்டிருக்கின்றோமா அல்லது விளங்கிக் கொள்கின்ற முயற்சியில் நாம் இருக்கின்றோமா என்பதைத்தான் நான் இந்த அவையிலே முன்வைத்துள்ளேன்.

நிறைய எண்ணங்கள் எனக்கு இருக்கின்றன. ஆனாலும், அவற்றை வளர்த்தெடுக்கின்ற பணி, இருக்கின்றதா என்பது தான். இந்த நூலை ஆய்வு செய்ய பல ஆண்டுகள் எடுத்தன. இதைப் போல நூறு நூல்களை ஆக்கினால் ஓரளவு தமிழ் மொழி வளர வாய்ப்புள்ளது. ஆனால், அதுவரையும் இருக்க முடியுமா என்பதுதான் கேள்விக்குறியாகவுள்ளது என்றார். (பா)

# முகமாலையில் பல்கலை. மாணவன் தடுத்து வைத்து விசாரணை

(யாழ்ப்பாணம்)

முகமாலைச் சோதனைச் சாவடியில் நேற்று முன்தினம் பல்கலைக்கழக மாணவர் ஒருவர் இராணுவத்தினரால் தடுத்து வைத்து விசாரிக்கப்பட்டதாகக் கூறப்படுகின்றது.

சுழிபுரம் மேற்கைச் சேர்ந்த மாணிக்கவாசகம் கோணேஸ் உடற்கல்வித் துறை இரண்டாம் வருட மாணவனே இவ்வாறு விசாரிக்கப்பட்டுள்ளார்.

விடுதலைப்புலிகளின் அடையாள அட்டையை காண்பித்தால்தான் செல்ல முடியும் என இராணுவத்தினர் மிரட்டியதாக கோணேஸ் கூறியுள்ளார்.

இரண்டு மணி நேரம் தடுத்து வைக்கப்பட்டு விசாரிக்கப்பட்டதாகவும், இது குறித்து யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழு அலுவலகத்தில் முறைப்பாடு செய்யப்பட்டதாகவும் அவர் மேலும் கூறியுள்ளார்.

# பிரதேச செயலக ஊழியர்களின் அசமந்தத்தால் மக்கள் விசனம்

மண்முனைப்பற்றுப் பிரதேச செயலகத்தில் மக்களின் அன்றாட தேவைகளைப் பூர்த்திசெய்ய அலுவலகத்திற்குச் சென்றால் குறிப்பிட்ட அதிகாரிகளைச் சந்திக்க முடியாது போவதாக பொதுமக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

மக்களின் பலதரப்பட்ட வேலைகளை அவ்வலுவலகத்தினூடாகவே செய்ய வேண்யுள்ளதால் பொதுமக்கள் அலுவலகத்திற்குச் சென்றால் அதிகாரி வராமல் இருப்பார் அல்லது இழுத்தடிப்புகளாக இருப்பதும் மக்கள் தேவைகளை உரிய காலத்திற்கு செய்து முடிக்க இயலாமலிருப்பதாகக் கவலை தெரிவிக்கின்றனர்.

பிரதேச செயலகத்தின் காணி, சமூர்த்தி, உணவு முத்திரை, அடையாள அட்டை, பாஸ்போட் போன்ற பல தரப்பட்ட பகுதிகளில் அதிகாரிகள் உள்ளபோதும் பொதுமக்களின் பிரச்சினைகளை உரிய நேரத்திற்கு. உரிய காலத்திற்கு முடிக்க முடியாமல் இழுத்தடிப்பதும், சாக்குப்போக்கு கூறுவதும் பொதுமக்களுக்குப் பல சிரமங்களை ஏற்படுத்துவதாகக் கூறுகின்றனர்.

# வடக்கிலுள்ள மக்களின் காணிகளைப் படையினர் பலவந்தமாகக் கைப்பற்றி வைத்துள்ளனர்

## -சந்தேசிய நிகழ்ச்சி தயாரிப்பாளர்

(கொழும்பு)

சிறிலங்கா பாதுகாப்புப் படையினர் வடக்கிலுள்ள பொது மக்களின் காணிகளைப் பலவந்தமாகக் கைப்பற்றி வைத்திருக்கின்றனர் என பி.பி.சி சிங்கள நிகழ்ச்சித் தயாரிப்பாளர் பிரியத் லியனகே லண்டனில் நடந்த கூட்டம் ஒன்றின் போது தெரிவித்துள்ளார்.

"தெற்காசிய பேச்சுவார்த்தை சபை" எனும் அமைப்பு லண்டனில் ஏற்பாடு செய்திருந்த கூட்டத்திற்கு சமுகமளித்த லியனகே பலாலி விமானத் தளத்தின் 50 கி.மீ சுற்றுவட்டாரத்தை படையினர் தன்வசப் படுத்தி வைத்திருப்பதாக அவர் தெரிவித்துள்ளார்.

இக் கூட்டத்தில் கலந்து கொண்ட பாதுகாப்புப் பிரிவைச் சேர்ந்த அதிகாரி வலிகாமப் பகுதியிலுள்ள பலாலி விமானத் தளத்தைச் சுற்றியுள்ள பகுதிகள் அரசுக்கு சொந்தமானவை எனத் தெரிவித்தார். என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

# முல்லை. நகர் தபாலகம் இன்றுதொடக்கம் இயங்கும்

(அலுவலக செய்தியாளர்)

முல்லைத்தீவு தபாலகம் இன்று முதல் முல்லைத்தீவில் இயங்கவுள்ளது.

இராணுவ நடவடிக்கை மூலம் இடம் பெயர்ந்து புதுக்குடியிருப்பில் இயங்கிவந்த முல்லைத்தீவு தபாலகம் 10 ஆண்டுகளின் பின் இன்று முதல் முல்லைத்தீவில் இயங்கவுள்ளது.

அத்தோடு மாவட்ட அஞ்சல் உத்தியோகத்தராக குமரகுரு அவர்களும் இராமச்சந்திரன் நவரட்ணம், ஆர்.கெங்காதரன் ஆகியோர் அஞ்சல் அதிபர்களாகத் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.

இந்நிலையில் ஒட்டுசுட்டான் தபாலகம் இடம் பெயர்ந்து இது வரையும் முல்லைத்தீவு தபாலகத்துடன் இயங்கிவந்தது. தற்போது முல்லைத்தீவு தபாலகம் சொந்த இடத்திற்கு செல்வதால ஒட்டுசுட்டான் தபாலகத்தின் நிலை கேள்விக்குறியாகியுள்ளது. (பா)

# பொலித்தீன் பாவனையைக் குறைக்க பனையோலை உமல் பாவனை

(அலுவலக செய்தியாளர்)

பொலித்தீன் பாவனையை கட்டுப்படுத்தும் நோக்கில் பனை ஓலையால் ஆன உமல் பாவனையைக் கொண்டு வரும் திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இத்திட்டம் முதற் கட்டமாக பூநகரி பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்திற்கு இரு நூற்றுக்கு மேற்பட்ட பனை ஓலையால் ஆன உமல்கள் வழங்கப்பட்டுள்ளன. இவை பனை வள அபிவிருத்திச் சபையால் வழங்கப் பட்டுள்ளது. இந் நடவடிக்கை மூலம் பொலித்தீன் பாவனையைக் குறைக்க முடியும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (லோ)

# விபத்துக்களைத் தவிர்க்க காவல்துறை நடவடிக்கை

(அலுவலக செய்தியாளர்)

பரந்தன்-புதுக்குடியிருப்பு வீதியில் பரந்தனுக்கும் தருமபுரத்துக்கும் இடையில் வீதி புனரமைப்பு வேலைகள் நடைபெற்று வருவதால் விபத்துக்கள் இடம் பெறாது தவிர்க்கும் வகையில் தமிழீழ காவல் துறையினர் வீதி ஒழுங்கு நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளனர்.

தற்போது புனரமைக்கப்படும் மேற்படி வீதியில் கிறவல்கள் குவியல் குவியலாக நீண்ட தூரத்துக்கு கொட்டப்பட்டுள்ளன. இவ்வாறு கொட்டப்பட்டிருப்பதனால் வீதிப்போக்கு வரத்து பாதிக்கப்பட்டதுடன் வாகன நெரிசல்களையும் எதிர்நோக்கியுள்ளது. இந்நிலையில் தமிழீழ காவல் துறையினர் வீதி ஒழுங்குப் பணியில் ஈடுபட்டுள்ளனர். (லோ)

# வயிற்றோட்டம் பரவுகிறது!

இரத்தினபுரி மாவட்டத்தில் இரத்த வயிற்றோட்ட நோய் தீவிரமாகப் பரவி வருகின்றது. இந்த நோயினால் இதுவரை 63 பேர் இரத்தினபுரி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்கள்.

கடந்த சில வாரங்களாகப் பெய்த அடை மழையின் காரணமாகவே இந்த நோய்த் தொற்று அதிகரித்துள்ளது.

நன்றாகக் கொதித்தாறிய நீரைப் பருகுவதுடன், சூழலை துப்புரவாக வைத்திருக்குமாறும் மக்களுக்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது.


12 ஆம் ஆண்டு நினைவலைகள்

மண்ணில் 10 . 01 . 1973



விண்ணில் 12 . 05 . 1991

வீரவேங்கை கீரோ

இராமகிருஷ்ணன் இதயராசா

நீர்வேலி வடக்கு, யாழ்.

*எம் தலைவன் வழியில் புலியாகினாய்*
*எம் மண்ணில் பகைவனுடன் சீறினாய்*
*எம் மண்ணிலே குருதியால் குளித்தாய்*
*ஈழம் மலரவேண்டும் என நினைத்தாய்*
*என்றும் உன் நினைவுடன்...*

அண்ணன்
இ.நிசாந்தன்
(போராளி)

விசுவமடு (3251)



நிகோட் NECORD அனுசரணையுடன் வுஸ் (WUSC) நிறுவனம் வவுனியா, மன்னார், கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில் நடாத்தவிருக்கும் தொழிற்பயிற்சிகளுக்கு பொருத்தமான இளைஞர் யுவதிகளிடமிருந்து

## விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன

***பயிற்சி விபரங்கள்***

| | |
|---|---|
| மின்னொட்டு (Welding) | -18 மாதங்கள் |
| மேசன் பயிற்சி (Masonry) | -18 மாதங்கள் |
| தச்சுவேலை (Carpentry) | -18 மாதங்கள் |
| மின்இணைப்பு (Wiring) | -18 மாதங்கள் |
| நீர்க்குழாய் இணைப்பு (Plumbing) | -18 மாதங்கள் |

**பயிற்சியின் அனுகூலங்கள்**

*தொழில் வாய்ப்பைப் பெற்றுக்கொள்ளும் வகையிலான தரம் வாய்ந்த முழுமையான தொழில் பயிற்சியை பெறுதல்.

*பயிற்சிக்காலத்தில் பயிற்சியை தொடர்வதற்கான அடிப்படை ஊக்குவிப்பு கொடுப்பனவு /போக்குவரத்து வசதிக்காக துவிச்சக்கர வண்டி அல்லது வதிவிட தூரம் கருதி தங்குமிடக்கொடுப்பனவு. (அதிகூடிய கொடுப்பனவு 2050)ரூபா) என்பன வழங்கப்படும்.

*பயிற்சி முடிவில் தொழில்புரிவதற்கான 6000 ரூபாய் பெறுமதியான உபகரணத் தொகுதி வழங்கப்படும்.

**பயிற்சியில் இணைவதற்கான விபரங்கள்**

***பயிற்சிக்காலம்***
18 மாதங்கள் (தொழில் பயிற்சி: 12 மாதம் + வெளிக்களப்பயிற்சி: 06 மாதம்)

***இலக்குக் குழு***
விசேட தேவைக்கு உட்பட்டோர் ( வலுவிழந்தோர்.) பெற்றோரை இழந்த பிள்ளைகள், பாடசாலைக் கல்வியை தொடரமுடியாத இளைஞர், யுவதிகள் கணவனை இழந்த குடும்பத்தலைவி, தடுப்பு முகாமில் தடுத்துவைக்கப் பட்டு விடுதலைபெற்றோர்.

***வயதெல்லை***
17தொடக்கம் 29 வயதிற்கு உட்பட்டோர் (பெண்களுக்கு வயதெல்லை கருத்தில் கொள்ளப்படமாட்டாது.)

***கல்வித் தகைமை***
தரம் 8ஐ பூர்த்தி செய்தவர்களாகவும் எழுதவாசிக்கத் தெரிந்தவர்களாகவும் இருத்தல் வேண்டும்.
மேலதிக விபரங்களுக்கும் விண்ணப்பப்படிவங்களுக்கும் தங்கள் பகுதியில் உள்ள கிராம சேவை உத்தியோகத்தருடன் தொடர்பு கொள்ளவும்.

***விண்ணப்ப முடிவுத் திகதி:*** 20.06.2003

(3189)


# உளவியல் சார் கல்வி!

(அலுவலக செய்தியாளர்)

கடந்த காலங்களில் நடைபெற்ற யுத்தத்தினால் மனநிலை பாதிக்கப்பட்ட சிறுவர்களுக்கு உளவியல் சார்ந்த கல்வியை ஜீ.ரி.சற் நிறுவனம் நடைமுறைபடுத்தவுள்ளது.

வன்னிப் பகுதிகளில் தாய் தந்தையரை இழந்த போரினால் ஏற்பட்ட இழப்புக்களால் விரக்தியடைந்த மாணவர்களுக்கான கல்வியை ஆரம்பிப்பதற்கான நடவடிக்கைகளை மேற்படி நிறுவனம் மேற்கொண்டு வருகின்றது. (பா)

# நெற்செய்கை பாதிப்பு!

(மட்டக்களப்பு)

அம்பாறை மாவட்டத்தில் தற்போது காற்றுடன் பெய்யும் மழையால் நெற்செய்கை பாதிக்கப்பட்டுள்ளது.

காலபோக விதைப்பு முடிவடைந்து மூன்று வாரங்களுக்குள் மழை பெய்துள்ளதால் நெற்பயிர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளன. மேலும் சில பகுதிகள் வெள்ளத்தில் மூழ்கியிருப்பதாகவும் அறிவிக்கப்படுகிறது.

# சத்தியாக்கிரகம் தொடர்கின்றது!

ஊவா மாகாணத்தில் தொழில் வாய்ப்பின்றி இருக்கும் பட்டதாரிகள் சத்தியாக்கிரகப் போராட்டத்தில் கடந்த 23ஆம் திகதி முதல் ஈடுபட்டுள்ளனர்.

இம்மாகாணத்தில் பட்டதாரிகள் மற்றும் டிப்ளோமாத் தகைமை பெற்ற 3879 பேர் தொழில் வாய்ப்பின்றி உள்ளனர்.

பதுளை சேனநாயக்கா மைதான அரங்கில் இந்தப் போராட்டம் தொடருகின்றது.


31 ஆம் நாள் நினைவலைகள்

அன்னை மடியில் 1972 . 04 . 28



ஆண்டவன் சந்நிதியில் 2003 . 04 . 12

பவுலீனப்பு ஜோஜ்வின்சன்
(சுரேஸ்)

அன்பின் அமலனே
அழகின் திருவுருவே
உன் எழில் நிறைந்த ~ அன்பு
வதனம் வாடிய செய்தி
எம் காதுகளில் கேட்டு ஓயவில்லை
வந்ததையா 31ஆவது நாளும்
எமது கண்ணீர்கள் காயவில்லை
உமது செல்ல மொழியின் ஓசை~ஓயவில்லை
நீர மண்ணில் பதித்தகால் சுவடுகள் இன்னும்
~அழியவில்லை
எப்படி ஐயா உம்மை மறப்பது
உம்மை எம் இருவிழிகளில் வைத்து
என்றும் பூசிப்போமையா

உமது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம். அன்னாரின் ஆத்மசாந்தி திருப்பலி 12.05.2003 (திங்கட்கிழமை) அன்று காலை 6.30 மணிக்கு செம்பியன் பற்று புனித பிலிப்புநேரியார் ஆலயத்தில் நடைபெறும். அத்திருப்பலியில் பங்குகொண்டு அன்று அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் மதிய போசனத்தில் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

குடும்பத்தினர்

செம்பியன்பற்று வடக்கு
செம்பியன்பற்று.

(3215)

## சிந்தனைக்கு

உண்மையில் எமது மக்களின் பாரிய உயிரிழப்பிற்கும், அவர்களின் உடமை நாசத்திற்கும் சிங்கள ஆளும் வர்க்கத்தின் இனவெறிபிடித்த தலைவர்களே பொறுப்பேற்க வேண்டும்.

- தமிழீழத் தேசியத் தலைவர்.



ஈழநாதம்
EELANATHAM மக்கள் நாளிதழ்
யாழ். சாலை, கிளிநொச்சி. 12-05-2003

## முதல் அடி!

அபிவிருத்தி லொத்தர் சபையை சுவீகரித்ததன் மூலம் சனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா ரணில் விக்கிரமசிங்கவின் அரசாங்கத்திற்கு எதிராகத் தனது நடவடிக்கைகளை வெளிப்படையாக ஆரம்பித்துள்ளார் எனலாம்.

சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க ஏதோ ஒரு அமைச்சைப் பறித்தெடுப்பதன் மூலம் தனது எதிர் நடவடிக்கையை ஆரம்பிப்பார் என்றே எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் தற்பொழுது முழு அளவில் ஒரு அமைச்சைப் பறித்தெடுக்காமல் விஞ்ஞான தொழில்நுட்ப பொருளாதார மறுசீரமைப்பு அமைச்சின் கீழ் இருந்த ஒரு பகுதியைப் பரீட்சார்த்தமாகப் பறித்தெடுத்துள்ளார் எனலாம்.

சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க முதலில் வெகுசனத் தொடர்பு அமைச்சைப் பறித்தெடுக்கலாம் என்பதற்கான சமிக்கைகளே வெளிப்பட்டது. அதாவது சனாதிபதிக்கு எதிராக அவதூறுப் பிரச்சாரம் மேற்கொள்ளப்படுவதாக ஊடகத்துறை அமைச்சின் மீது குற்றம் சாட்டப்பட்டது. பின்னர் பொலிஸ் திணைக்களம் பொ.ஐ முன்னணியினருக்கு எதிராகச் செயற்படுவதாகக் குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டன. இதன் மூலம் உள்துறை அமைச்சின் மீது சனாதிபதி சந்திரிகாவின் குற்றச்சாட்டுகள் திரும்பியிருந்தன.

ஆனால், தற்பொழுது இவற்றைக் கைவிட்டு தேசிய லொத்தர் சபையைச் சனாதிபதி சந்திரிகா தமது அதிகாரத்தின் கீழ்க் கொண்டு வந்ததன் மூலம் வேறொரு அமைச்சில் கை வைத்துள்ளார். ஆனால் சனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் இது போன்றதொரு நடவடிக்கையானது எதிர்பார்த்திராத தொன்றல்ல.

சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க ரணில் அரசாங்கத்திற்கு எதிரான நடவடிக்கைகளை டோக்கியோவில் நடைபெறவுள்ள உதவி வழங்கும் மாநாட்டிற்கு முன்னதாக மேற்கொள்வார் என்பது ஏற்கனவே உணரப்பட்டதொன்றாகவே இருந்தது. இது குறித்து பொ.ஐ.முன்னணியினர் வெளிப்படையாகப் பேசியும் இருந்தனர்.

இவ்விடயத்தில் எதிர்க் கட்சியினர்-குறிப்பாகச் சனாதிபதி சந்திரிகா குறியாக இருந்தமைக்கும் காரணம் இல்லாமல் இல்லை. அதாவது ஐ.தே.முன்னணி அரசாங்கம் மேற்கொண்டுள்ள சமாதான முயற்சியானது டோக்கியோ மாநாட்டில் அதற்குப் பெரும் தொகை நிதியைப் பெற்றுக் கொடுப்பதாக இருக்கும் என்பது சனாதிபதிக்கு நன்கு தெரியும். ரணில் தலைமையிலான ஐ.தே. முன்னணி அரசாங்கமும் இந் நிதியை எதிர்பார்த்தே சமாதான முயற்சிகளில் தீவிரமாக ஈடுபட்டுவந்தது என்பதே உண்மையும் கூட.

சிறிலங்கா அரசாங்கத்தைப் பொறுத்து டோக்கியோவில் கிடைக்கப்பெறும் நிதியே அதன் எதிர்காலத்தைத் தீர்மானிக்கக் கூடியதாகும். அதாவது சமாதான முயற்சியின் மூலம் சிறிலங்கா அரசு பெற்று வரும் பொருளாதார புத்துயிர்ப்பு வலுப்பெறவும், இதன் மூலம் ரணில் அரசாங்கம் அரசியல் ரீதியில் நிலைபெறவும் இந் நிதியுதவியானது மிகமிக அவசியமானதாகும். இந்நிதி உதவி கிடைக்கப்பெறாமலோ அன்றி அதில் பெரும் வெட்டோ ஏற்படுமேயானால் சிறிலங்காவின் பொருளாதாரம் சீர்படுத்தப்பட முடியாத ஒன்றாகவே இருக்கும். இதன் விளைவானது அரசின் ஸ்திரத் தன்மையும் பாதிப்பிற்கு உள்ளாகக்கூடும்.

இதனை நன்கு புரிந்துகொண்டுள்ள சந்திரிகா குமாரதுங்க டோக்கியோ மாநாட்டிற்கு முன்னதாக ரணில் விக்கிரமசிங்க அரசாங்கத்தைப் பலவீனப்படுத்துவதன் மூலம் சிறிலங்காவிற்குக் கிடைக்கப்பெறும் நிதியுதவியில் பெரும் வெட்டு ஒன்றைச் செய்ய முற்பட்டு நிற்கின்றார். இதனைத் தற்பொழுது அபிவிருத்தி லொத்தர் சபையைச் சுவீகரிப்பதன் மூலம் ஆரம்பித்து வைத்துள்ளார் எனலாம்.

ஆனால், தனியாகச் சனாதிபதி சந்திரிகா இத்தகையதொரு மார்க்கத்தைத்தான் கைக்கொள்வார் என்பதல்ல. அதனோடு சேர்த்து வேறு சில மார்க்கங்களும் கைக்கொள்ளப்படும் என்று எதிர்பார்த்திருக்கலாம். குறிப்பாக ஜே.வி.பி.யுடன் புரிந்துணர்வு உடன்பாடு ஒன்றின் மூலம் இணக்கப்பாட்டிற்கு விரைவில் வரும் அவர் சமாதான முயற்சிகளுக்கு எதிரான நடவடிக்கைகளைத் தீவிரப்படுத்துவார் என்றே எதிர்பார்க்கலாம். அதாவது விடுதலைப் புலிகளுக்கு நாட்டை அரசு தாரைவார்க்கின்றது என்ற ரீதியில் பௌத்த-சிங்கள பேரினவாதத்தைக் கிளறும் வகையில் மேற்கொள்ளும் பிரச்சாரத்தின் மூலம் ரணில் அரசாங்கத்திற்கு எதிரான நடவடிக்கைகளைத் தீவிரமாக்கக் கூடும்.

இதன் மூலம் அரசாங்கம் பலவீனமானதொரு நிலையில் இருப்பதாக வெளிக்காட்ட முனைவதே எதிர்க் கட்சியினரின் குறிக்கோளாகும். அதாவது அரசியல் யாப்பு ரீதியிலும் சரி, மக்கள் செல்வாக்கிலும் சரி, அரசு பலவீனமானதொரு நிலையில் இருப்பதாகவும்- சமாதான முயற்சிகளின் வெற்றி மீது அவநம்பிக்கையையும் தோற்றிவிப்பதே எதிர்க் கட்சியினரின்-குறிப்பாகச் சந்திரிகா குமாரதுங்கவின் திட்டமாகும்.

இதனை நோக்கமாகக் கொண்டு ஆரம்பிக்கப்பட்ட முதலாவது நடவடிக்கையே அபிவிருத்தி லொத்தர் சபை சுவீகரிப்பாகும். இந்த ரீதியில் டோக்கியோ மாநாட்டிற்கு முன்பதாக மேலும் பல நடவடிக்கைகளை எதிர்பார்க்கலாம். சனாதிபதி சந்திரிகாவின் இந் நடவடிக்கைகள் ஐ.தே.முன்னணி அரசாங்கத்தைக் கலைக்கும் அளவிற்குச் செல்லுமா? அது சாத்தியமானதொன்றாக இருக்குமா? என்பது குறித்து தற்பொழுது எதிர்வு கூற முடியாது போனாலும் ரணில் அரசாங்கத்தையும் பெருமளவில் பலவீனப்படுத்துவதாக - பலவீனமானதாகக் காட்டிக்கொள்வதற்கானதாக இருக்கும் எனவும் துணிந்து கூறலாம்.

# புலிகளின் கருத்துக்கள் நியாயமானவை; மாநாட்டைப் புறக்கணிப்பது நல்லதல்ல!

### -ஐரோப்பிய பா.உ. ஜோன் குஷ்னாகன்

இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளின் டோக்கியோ மகாநாட்டிற்கு முன்னோடியாகக் கடந்த மாதம் வாஷிங்டனில் நடத்தப்பட்ட 'சமாதான ஆதரவுக் கூட்டத்தில்'' தாங்கள் விலக்கி வைக்கப்பட்டது குறித்து விடுதலைப்புலிகள் கொண்டிருக்கும் விசனத்தின் நியாயத்தைப் புரிந்து கொள்வதாக தெரிவித்திருக்கும் ஐரோப்பிய பாராளுமன்ற உறுப்பினர் ஜோன் குஷ்னாகன், அடுத்த மாதம் டோக்கியோ மாநாட்டை விடுதலைப்புலிகள் பகிஷ்கரித்தால் அது தந்திரோபாய ரீதியான பாரிய தவறாக அமையும் என்று அபிப்பிராயம் தெரிவித்திருக்கிறார்.

டோக்கியோ மாநாட்டில் விடுதலைப்புலிகள் பங்கு கொள்ளாமல் விட்டால் சர்வதேச சமூகத்திலுள்ள சிலர் அதை விடுதலைப் புலிகளுக்கு சமாதான முயற்சிகளில் உண்மையான அக்கறை இல்லை என்பதற்கான சான்றாக வியாக்கியானப்படுத்தக்கூடும் என்றும் குஷ்னாகன் தெரிவித்துள்ளார்.

சமாதான முயற்சிகளுக்கு உதவுவதற்காக அரசாங்கத்தின் சமாதானச் செயலகத்தின் அழைப்பின் பெயரில் இலங்கைக்கு இரு வாரகால விஜயத்தை மேற்கொண்டிருந்த அயர்லாந்தைச் சேர்ந்தவரான குஷ்னாகன் நேற்று முன்தினம் சனிக்கிழமை கொழும்பில் ஐரோப்பிய ஆணைக்குழுவின் அலுவலகத்தில் செய்தியாளர் மாநாடொன்றை நடத்தியுள்ளார்.

இலங்கைக்கான தனது விஜயத்தின் போது பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, அரசாங்க எதிர்க் கட்சி சிரேஷ்ட தலைவர்கள், விடுதலைப்புலிகளின் தலைவர்கள், சிரேஷ்ட இராணுவ அதிகாரிகள், இராஜதந்திர சமூகத்தவர் மற்றும் சிவில் அமைப்புக்களின் பிரதிநிதிகள் ஆகியோரைச் சந்தித்து இலங்கை நிலவரங்கள் தொடர்பான விரிவான பேச்சுவார்த்தைகளை நடத்தியுள்ளார்.

இலங்கையின் சமாதான நடவடிக்கைகளுக்காக அடித்தளமிட்ட விடுதலைப்புலிகளையும் அரசாங்கத்தையும் நான் பாராட்டுகிறேன். சிக்கல்கள் நிறைந்த காலகட்டத்தின் கைதிகளாக இருப்பதை விட இலங்கையின் எதிர்காலத்தை உறுதிப்படுத்துபவர்களாக அவர்கள் தமது துணிவின் மூலம் தம்மை வெளிப்படுத்தியுள்ளனர்.

அதேநேரம் சமாதானப் பேச்சுவார்த்தைகளிலிருந்து தற்காலிகமாகப் புலிகள் விலகி இருப்பது ஏமாற்றத்தை அளிக்கின்றது.

எனினும், அவர்கள் தமக்கு போர் நிறுத்த உடன்படிக்கையை முடிவுக்குக் கொண்டு வரும் எந்த எண்ணமும் இல்லையென்பதைச் சுட்டிக்காட்டி இருப்பது வரவேற்கத்தக்கதாகும்.

வாஷிங்டன் முன்னோடி மாநாட்டில் தாம் விலக்கப்பட்டமை குறித்து ஆத்திரத்தையும், வடக்கு-கிழக்கு அவசர மனிதாபிமான உதவிகள் விநியோகம் தாமதமடைவது குறித்து தமது ஏமாற்றத்தை வெளிப்படுத்தியிருப்பது நியாயமானது.

ஆனால்,டோக்கியோ மாநாட்டில் கலந்து கொள்ளாது விலகுவது முரணானது என்று நான் கருதுகிறேன் என்றார்.

# அரச அச்சகம் 'சீல்' வைக்கப்பட்டமை பயங்கரவாதத்தின் உச்ச வெளிப்பாடு!

### தினேஸ் குணவர்த்தன கூறுகிறார்

(கொழும்பு)

அரச பயங்கரவாதத்தின் உச்சக் கட்ட வெளிப்பாடாகவே அரசாங்க அச்சகப் பகுதி சீல் வைக்கப்பட்டிருப்பதாக குற்றம் சாட்டியிருக்கும் பொ.ஐ.முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினர் தினேஷ் குணவர்த்தன, எந்தவொரு நேரத்திலும் எந்தவொரு நடவடிக்கையினையும் எடுக்கக் கூடிய அதிகாரமும், பொறுப்பும் சனாதிபதிக்கு உண்டெனக் கூறியிருக்கின்றார்.

எதிர்க் கட்சித் தலைவர் அலுவலகத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற செய்தியாளர் மாநாட்டில் அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

எந்தவொரு அமைச்சையும் தனக்குக் கீழ்க் கொண்டு வரும் அதிகாரம் சனாதிபதிக்கு உண்டு. அரசாங்கத்திடம் கலந்தாலோசித்துத்தான் அமைச்சைப் பொறுப்பேற்க வேண்டும் என்று சட்டம் இல்லை. அதற்கான அவசியமும் இல்லை. அபிவிருத்தி லொத்தர் சபை மூலம் சனாதிபதி நிதியத்திற்கு பெருமளவில் நிதி வழங்கப்பட்டு வந்தது. இந்த அரசாங்கம் ஆட்சிக்கு வந்த பின்னர் இது முற்றாகநிறுத்தப்பட்டது. இது குறித்து சனாதிபதி சந்திரிகா பல முறை அரசாங்கத்திடம் தெரியப்படுத்தியும் எந்தவொரு நடவடிக்கையும் எடுக்கப்படாத நிலையிலேயே அபிவிருத்தி லொத்தர் சபையைச் சனாதிபதி பொறுப்பேற்றுள்ளார்.

# சு. கட்சி பிரதித் தலைவர் பதவிக்கு ராஜபக்ச; தடுக்க மூத்த தலைவர்களுடன் சனாதிபதி முயற்சி

(கொழும்பு)

தற்போது வெற்றிடமாகவுள்ள சு.க.வின் பிரதித் தலைவர் பதவிக்கு மகிந்த ராஜபக்சவை நியமிக்க கட்சியின் பின் வரிசை உறுப்பினர்கள் கட்சியின் செயற்குழுவிற்குத் தெரிவித்த யோசனையைத் தடுக்குமாறு சனாதிபதி சந்திரிகா தமது மிக நெருக்கிய பாராளுமன்ற உறுப்பினர்களுக்குத் தெரிவித்துள்ளார்.

மங்கள சமரவீர, அனுரா, சிறிபாலசில்வா ஆகிய சு.க.சிரேஷ்ட உறுப்பினர்கள ஏனைய சு.க.உறுப்பினருடன் இந்த யோசனைக்கு மறுப்புத் தெரிவிக்குமாறு இரகசியமாகக் கேட்டுள்ளார்.

சனாதிபதியின் சமிக்ஞையின்படி அனுராவை விட மகிந்த ராஜபக்சவிற்கு அரசியலில் செல்வாக்கு காணப்படுவதை அடுத்தும் கட்சியினுள் அவருக்குள்ள செல் வாக்கை அடுத்தும் அவரை கட்சியின் பிரதித் தலைவர் பதவியிலிருந்து விலக்கி வைப்பது முடியாததொன்றாக சனாதிபதி கருதுகின்றார். எனினும், மங்கள சமரவீர போன்றோர் இவரின் பதவிக்கு வெறுப்புக் காட்டியுள்ளனர். இதனை நோக்கும் போது சனாதிபதியின் நிலை 'இருதலைக் கொள்ளி எறும்பின்' நிலையாகவுள்ளது.

# முக்கோண கிரிக்கெட் போட்டியில் நியூசிலாந்து வெற்றி

சிறிலங்கா -பாகிஸ்தான் நியூசிலாந்து அணிகள் கலந்துகொள்ளும் முக்கோண ஒரு நாள் கிரிக்கெட் தொடரில் நேற்று தம்புள்ள மைதானத்தில் நடைபெற்ற போட்டியில் நியூசிலாந்து அணி பாகிஸ்தான் அணியை 7 விக்கெட்டுக்கள் வித்தியாசத்தில் வெற்றிபெற்றது.

முதலில் துடுப்பெடுத்தாடிய பாகிஸ்தான் அணி 43-1 ஓவரில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 116 ஓட்டங்களைப் பெற்றது. பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய நியூசிலாந்து அணி 27-3 ஓவரில் வெற்றி இலக்கை எட்டியது.

இத்தொடரில் நேற்று முன்தினம் இதே மைதானத்தில் விளையாடிய சிறிலங்கா அணி பாகிஸ்தான் அணியிடம் 79 ஓட்டங்களால் தோல்வியடைந்தது. இத்தொடரின் மூன்றாவது போட்டி நாளை நியூசிலாந்து சிறிலங்கா அணிகளுக்கிடையில் நடைபெறும்.

# அதிர்ச்சித் தோல்வி

ஜேர்மனியில் நடைபெற்றுவரும் சர்வதேச மகளிர் ஓப்பின் டென்னிஸ் போட்டியில் அரையிறுதி ஆட்டமொன்றில் அமெரிக்க வீராங்கனை ஜெனிபர் கப்ரியாற்றி அதிர்ச்சித் தோல்வியடைந்துள்ளார்.

பேர்ளின் நகரில் நடைபெற்று வரும் இப்போட்டியில் உலகின் முன்னணி வீராங்கனைகள் கலந்துகொண்டுள்ளார்கள்.


இப்போட்டியின் அரையிறுதி ஆட்டமொன்றில் ஜெனிபர், பெல்ஜியம் வீராங்கனை பில்சியேசைச் சந்தித்தார்.

விறுவிறுப்பான இவ் ஆட்டத்தில் 6.4, 6.7, 6.4 செட்களில் பில்சியேஸ் வெற்றிபெற்று ஜெனிபர் கப்ரியாற்றிக்கு அதிர்ச்சித் தோல்வி அளித்துள்ளார்.

# முறைகேடாக நடந்த வீரருக்கு அபராதம்

பாகிஸ்தான் அணியுடன் நேற்று முன்தினம் நடைபெற்ற போட்டியின் போது முறைகேடாக நடந்துகொண்டமைக்கு இலங்கை கிரிக்கெட் அணியின் வேகப் பந்து வீச்சாளர் பிரபாத் நிஸங்கவுக்கு தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

இவர் தனது ஆட்டக்கட்டணத்தில் 30 வீதத்தை அபராதமாகச் செலுத்த வேண்டுமெனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.



# சமாதானப் பேச்சுக்களின் எதிர்காலம் அரசாங்கத்தின் கைகளிலேயே உள்ளது

## அம்பாறை மாவட்ட பா.உ.சந்திரநேரு அரியநாயகம்

சமாதானப்பேச்சுக்களின் எதிர்காலம் அரசாங்கத்தின் கைகளிலேயே தங்கியுள்ளதாக தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் அம்பாறை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சந்திரநேரு அரியநாயகம் தெரிவித்துள்ளார்.

போர் நிறுத்த ஒப்பந்தத்தில் கைச்சாத்திடப்பட்டு நிறைவேற்றப் படாத விடயங்களையும் பேச்சுக்களில் இணக்கம் காணப்பட்ட விடயங்களையும் செயற்படுத்த வேண்டும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

கிழக்கிலங்கை செய்தியாளர் சங்கம் நடத்திய சமாதானப் பேச்சு வார்த்தையின் எதிர்காலம் என்ற கருத்தரங்கில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

நிரந்தர சமாதானம் ஏற்பட வேண்டுமானால் தமிழர்களின் அபிலாசைகளை தீர்க்கக்கூடிய அர்த்தமுள்ள அரசியல் தீர்வையே முன்வைக்க வேண்டும் என்று அவர் மேலும் சுட்டிக்காட்டினார்.

விடுதலைப் புலிகள் தமது இராணுவ பலத்தை அதிகரிக்க வேண்டும். இதுவே இந்த நாட்டில் எமது உரிமைகளை உறுதிப்படுத்த ஒரே வழி. யுத்தம் மீண்டும் எம்மீது திணிக்கப்படுமானால் ஒவ்வொரு தமிழனும் எதுவித வேறுபாடுமின்றி விடுதலைப்புலிகளின் ஆயுதப் படையில் இணைய வேண்டும் இதுவே எமது மக்களைப் பாதுகாக்க ஒரே வழி என்றார்.



## - அரசியல் யாப்பின் அடிப்படையில் -

# பெரும் சர்ச்சைகளை உருவாக்கியுள்ள அபிவிருத்தி லொத்தர் சபை சுவீகரிப்பு

அரசியல் யாப்பின் அடிப்படையில் பாராளுமன்றத்திற்குப் பதிலளிக்க வேண்டிய கடப்பாடு சனாதிபதிக்கு உண்டு என்று சட்ட நிபுணர்கள் கருத்து வெளியிட்டுள்ளனர்.

இதற்கு உட்பட்டு நடப்பதற்கு சனாதிபதி தவறினால் அவருக்கு எதிராக நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை கொண்டுவரும் அதிகாரம் பாராளுமன்றத்திற்கு உண்டு என சனாதிபதி சட்டத்தரணி ஜயதிஸ்ஸ கருத்து வெளியிட்டார்.

அபிவிருத்தி லொத்தர் சபையை சனாதிபதி பொறுப்பேற்றதினால் மேலும் பெருமளவு அரசியல் யாப்பின் அடிப்படையிலான சர்ச்சைகள் உருவாகியுள்ளன.

அமைச்சர்களது பதவிகள் சம்பந்தமாக எந்தவொரு நடவடிக்கையையும் சனாதிபதி மேற்கொள்ள முன்னர் பிரதம மந்திரியுடன் ஆலோசனை மேற்கொள்வது அவசியமாகும் எனவும் அவர் தெரிவித்தார்.

சனாதிபதி சட்டத்தரணி ஜஸ்மன் பர்ணான்டோ கருத்து வெளியிடுகையில்;

'இத்தகைய சூழ்நிலையில் மக்கள் ஆணைக்கும், பாராளுமன்றத்தின் அங்கத்தினருக்கும் சனாதிபதி உரிய மதிப்பளிக்க வேண்டும் எனத் தெரிவித்தார்.

கொழும்பு பல்கலைக்கழக விரிவுரையாளர் தயான் ஜயதிலக விடுத்த எச்சரிக்கையில்;

சனாதிபதியின் இந்தவித நடவடிக்கை காரணமாக நாட்டின் ஸ்திரநிலை மேலும் பாதிக்கப்படும். சொந்த ரீதியில் அரசியல் லாபம் பெறுவதற்கு திட்டமிடுபவர்களுக்கு தற்போதைய நிலைமை நல்லதொரு சந்தர்ப்பமாகும் எனத் தெரிவித்தார்.

சட்டத்தரணி பிரசாந்த லால்டி எல்வின்கருத்து வெளியிடுகையில்; நாட்டின் பிரச்சினைகளை அரசியல் கோணத்தில் எவரும் ஆராயக் கூடாது. பரஸ்பர நம்பிக்கையின் அடிப்படையிலான அரசாங்கமே நாட்டின் சமூகப் பொருளாதார அபிவிருத்திக்கு அவசியமாகும் எனத்தெரிவித்தார்.

### தமிழ் மக்கள்...

யாது ஏனெனில் கடந்த ஓராண்டு காலமாக இந்தச் சமாதானச் சூழல் இருக்கின்றது. எமது மண்ணில் எந்த வொரு அபிவிருத்திப் பணியும் இடம்பெறவில்லை அத்துடன் நிதியுதவியும் கிடைக்கவில்லை.

தற்போது உள்ள அரசு செய்கின்றோம் என வாக்குறுதி மட்டும் வழங்குகின்றது ஆனால் செயல் ஒன்றும் இடம்பெறவில்லை தமிழர்கள் கடந்த ஐம்பது ஆண்டுகளாக சிங்கள அரசுகளால் ஏமாற்றப்பட்டு வந்திருக்கின்றார்கள் இனிவரும் காலங்களில் நாம் பலத்துடனும் விழிப்புடனும் இருந்து ஏமாற்றங்களைத் தவிர்த்துக்கொள்ள வேண்டும்.

இந்த சமாதான காலத்தில்தான் நாம் பதின்நான்கு போராளிகளையும் ஏழுக்குமேற்பட்ட மக்களையும் இழந்திருக்கின்றோம். இப்படியான சம்பவங்கள் எமக்கு ஒரு செய்தியை விளக்குகின்றன.

அதாவது நாம் பலத்துடன் இருக்கும் போதுதான் இவ்வாறான சம்பவங்களை நாம் தவிர்த்துக் கொள்ளலாம் நாம் எமது மக்களைப் பாதுகாத்துக்கொள்ள எமது படைப்பலம் அவசியமாகும் இந்த விடயங்களில் யாரும் தடைபோட முடியாது.

இப்பயிற்சியானது எமது மக்களின் பாதுகாப்பிற்கும் எம்முடைய படைக்கட்டமைப்பை மென் மேலும் பலப்படுத்துவதற்கும் உறுதுணையாக இருக்கும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

### அமெ.உதவி...

வரவேற்றனர்.

இவர் இரண்டு தினங்கள் இங்கு தங்கியிருப்பார். பிரதமர் ரணில் விக்கிரமசிங்க சமாதானப் பேச்சுவார்த்தைகளில் ஈடுபட்டுவரும் அரச பிரதிநிதிகளும் அமைச்சர்களுமான ஜீ.எல்.பீரிஸ், மிலிந்த மொறகொட, ரவூப் ஹக்கீம் ஆகியோர் உட்பட பலர் சந்தித்துப் பேசவுள்ளனர்.

இவர் இன்று மாலை திருகோணமலை மாவட்டத்திற்கு விஜயம் மேற்கொண்டு முக்கிய பிரமுகர்களைச் சந்தித்துப் பேசவுள்ளார்.

### மாமனிதர் விருதும்...

யையும் அதனை வழிநடத்துகின்ற தலைமையின் மதிநுட்பத்தையும் நன்கு அவதானித்த ஓர் அரசியல் மாணவன் என்ற வகையில் முக்கியமான காலகட்டத்தில் விடுதலைப் போராட்டத்திற்கு தனது பங்களிப்பை வழங்கிவந்தார்.

தமிழீழ விடுதலைப்புலிகள், தமிழ் மக்களின் விடுதலையின்பால் கொண்ட விசுவாசம், வழங்கிய ஈகம், காட்டிய அர்ப்பணிப்பு என்பனவற்றால் இவர் வெகுவாக ஈர்க்கப் பட்டதாக அடிக்கடி கூறுவதுண்டு. விடுதலைப்புலிகளின் தலைவர் திரு.வே. பிரபாகரன் மீது முழு நம்பிக்கை வைத்து தமிழ் மக்களின் அரசியல் விடுதலை அவர் காலத்திலேயே நடக்குமென்று தீர்க்க தரிசனமாகச் சொன்னவர்களில் அமரர் முதலிடம் வகிக்கின்றார். சிறிலங்காவில் தமிழ் மக்களின் அரசியல் தலைமைத்துவத்தை திரு. வே. பிரபாகரன் போல் வேறு எவரும் வகிக்கவில்லை என்பது அன்னாரின் கருத்தாக இருந்தது.

பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு விசாரணைகள் ஏதுமின்றி சிறைகளில் வாடிய தமிழ் இளைஞர் யுவதிகளுக்காக நீதிமன்றுகளில் தோன்றி வெற்றிகரமாக வாதாடினார். சர்வதேச மன்றுகளில் அதுவும் குறிப்பாக ஐ.நா. மனித உரிமைகள் ஆணைக் குழுவின் முன் தோன்றி இலங்கைத் தமிழ் மக்கள் பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் மூலம் அடிப்படை மனித உரிமை மீறல்களுக்கு உள்ளாகித் துன்புறுவதைச் சான்றிதழ்களுடன் நிரூபித்தார். இவற்றுக்கெல்லாம் அமரர் பெற்றுக் கொண்டது எதிரிகளின் துப்பாக்கிக்குண்டு வழங்கிய சாவேயாகும். இவரது சேவையினை தமிழினம் என்றென்றும் நினைவுகூரும்.

## - அபிவிருத்தி லொத்தர் மூலமே -

# சனாதிபதி நிதியத்தின் 80 சதவீதம் கிட்டுகின்றது!

## - சரத் அமுனுகம

சனாதிபதி நிதியத்திற்குத் தேவையான நிதியில் எண்பது சதவீதம் அபிவிருத்தி லொத்தர் மூலமாகவே பெறப்படுவதாக பொது சன ஐக்கிய முன்னணியின் ஊடகப் பேச்சாளர் சரத் அமுனுகம தெரிவித்துள்ளார்.

எதிர்க்கட்சி அலுவலகத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அரசியல் சாசனத்தின் மூலம் இந்த நிதி வழங்க ஏற்பாடு செய்யப் பட்டுள்ளது. சனாதிபதி எதிர் காலத்திலும் இது தொடர்பான மேலதிக நடவடிக்கைகளை எடுக்கவுள்ளார்.

சனாதிபதி இந்த விடயத்தில் தனது நிலைப்பாட்டை தெளிவுபடுத்தி உள்ளார். பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும், அமைச்சர் மிலிந்த மொறகொடவும் சனாதிபதிக்கு இது சம்பந்தமாகக் கடிதங்களை அனுப்பியுள்ளனர்.

இந்தக் கடிதங்கள் தொடர்பாக சனாதிபதி கலந்துரையாடி முடிவு செய்வார் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# சிறி.படை அதிகாரிகளுடன் சதீஸ் நம்பியார் பேச்சு!

(வவுனியா)

உயர் பாதுகாப்பு வலயம் தொடர்பாக சிறிலங்கா அரசால் நியமிக்கப்பட்ட இந்திய இராணுவத்தின் முன்னாள் ஓய்வுபெற்ற துணைத் தளபதி லெப்.ஜெனரல் சதீஸ் நம்பியார் வவுனியாவில் சிறிலங்காப் படைஅதிகாரிகளைச் சந்தித்து கலந்துரையாடியுள்ளார்.

நேற்று முன்தினம் இச் சந்திப்பு நடைபெற்றது. இதன் போது வவுனியா நிலைமை பற்றியும் அவர் ஆராய்ந்துள்ளார்.

இவருடன் சிறிலங்காப் படைத் துறை அமைச்சின் செயலாளர் ஒஸ்ரின் பெர்ணான்டோவும் விஜயம் செய்துள்ளார்.

# கொலைக்கான காரணங்களை கண்டறிய வேண்டும்

## உள்துறை அமைச்சர் ஜோன் அமரதுங்க

(கொழும்பு)

அண்மைக்காலமாக இடம்பெற்று வரும் படுகொலைகளுக்கான காரணங்களைக் கண்டறிய வேண்டியது அவசியம் என்று உள்துறை அமைச்சர் ஜோன் அமரதுங்க தெரிவித்துள்ளார்.

நாடு முழுவதிலும் உள்ள பொலிஸ் நிலையங்களுக்கு 400 நவீனரக ஜீப்வண்டிகளை வழங்கும் வைபவத்தில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு பேசும்போது அவர் இதனைக் கூறினார்.

## ஆசிரியர்களுக்கு உரிய பொறுப்புகளை வழங்கி

# ஒழுக்கமுள்ள மாணவர் சமுதாயத்தை உருவாக்க நடவடிக்கை எடுப்போம்

## அமைச்சர் கருணாசேன கொடித்துவக்கு

(கொழும்பு)

பாடசாலை வகுப்பு ஆசிரியர்களுக்கு மீண்டும் உரிய பொறுப்புக்களை வழங்கி ஒழுக்கம் நிறைந்த மாணவ சமுதாயத்தை கட்டியெழுப்பி கல்வி அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளதாக கல்வி அமைச்சர் கருணாசேன கொடித்துவக்கு தெரிவித்தார்.

ஒழுக்கமின்மையே இந்த நாட்டில் காணப்படும் பல பிரச்சினைகளுக்கு பிரதான காரணமாக இருப்பதாகவும் அவர் கூறினார்.

இதனால் பாடசாலைகளிலும் பல்கலைக்கழகங்களிலும் சமூகத்திலும் பல்வேறு பிரச்சினைகள் தோன்றுகின்றன. கடந்த காலங்களில் வகுப்பாசிரியர்களுக்கு வழங்கப்பட்டிருந்த முக்கிய பொறுப்புக்கள் இப்போது அவர்களிடம் இருந்து அப்பால் சென்றுவிட்டது. அவர்களுக்கு வேறுபல கடமைகள் வழங்கப்பட்டுள்ளதினாலேயே இந்த நிலைமை ஏற்பட்டுள்ளது.

இதனை மீளமைத்து ஆசிரியர்களுக்குப் பொறுப்புக்களை வழங்கி ஒழுக்கம் நிறைந்த மாணவ சமுதாயம் ஒன்றை உருவாக்க நடவடிக்கை எடுப்பதாக அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார்.

### அன்ரன்...

கருத்திற் கொண்டு லண்டனுக்கு பயணம் மேற்கொள்வதற்காக கட்டுநாயக்கா விமான நிலையம் நோக்கிச் சென்று கொண்டிருந்த போது காலநிலை சீரின்மை காரணமாக உலங்குவானூர்தி அநுராதபுரத்தில் தரையிறக்கப்பட்டது. பின்னர் அங்கிருந்து வேறொரு உலங்கு வானூர்தி மூலம் அவர்கள் இருவரும் கட்டுநாயக்க விமான நிலையம் சென்றடைந்தனர். (பா)

### அரசியல் ஆலோச...

குறைபாடு காரணமாக மீண்டும் லண்டன் புறப்பட்டுள்ளார். சிறிலங்கா விமானப்படைக்குச் சொந்தமான உலங்கு வானூர்தியில் நேற்று கொழும்பை சென்றடைந்த அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் அவர்கள், அவரது துணைவியார் அடேல் பாலசிங்கம் ஆகிய இருவரும் இன்று காலை விமானம் மூலம் லண்டன் புறப்படுகின்றனர்.

இவர்களைத் தமிழீழ அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன், அரசியல்துறை துணைப் பொறுப்பாளர் சோ.தங்கன், தளபதி கேணல் சொர்ணம், தளபதி கேணல் கடாபி, மற்றும் துறைசார் பொறுப்பாளர்கள், போராளிகள், மக்கள் என ஏராளமானவர்கள் கிளிநொச்சியில் இருந்து வழியனுப்பி வைத்தனர். (லோ)

# 03 ஆம் ஆண்டு நினைவில்...

தாயின் மடியில்
12
●
12
●
1982



தாயக மண்ணில்
12
●
05
●
2000

## வீரவேங்கை ஈழச்செல்வம்

பரஞ்சோதி ஜெகசோதி
அரசர்கேணி, பளை.

*அரசர் கேணி தனிலே உதித்தாய் – பின்
அதே மண்தனிலே படிப்பைத் தொடர்ந்தாய்
–அந்த வேளையில்
எல்லைப் புறத்தினிலே
எதிர் நிலை கொண்டதனால்
தாயக மீட்பிற்காய் – நீ
தலைவன் அணி சேர்ந்தாயோ! – அங்கு
களம் பல கண்டு விட்டு
தாய் மண்ணிலே உன் விழி மூடியதோ! – உன்
விழியோரக் கனவுகள் – என்றும்
நனவுகள் ஆகுமய்யா!*

த.முகவரி:
துர்க்கை அம்மன்,
கோவில் அருகாமை,
புதுக்குடியிருப்பு.

தகவல்:
பரஞ்சோதி குடும்பத்தினர்,
இளம்செல்வம்-(சகோதரன்)
போராளி (3216)

இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2003ம் ஆண்டு மே மாதம் 12ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.